AUGUST 04, 2020
TUESDAY
VOL: 006/064
RS. 10.00
LATE CITY ★

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror

## தனிமைப்படுத்தப்பட்டவர்கள்
# 'வாக்களிக்க முடியாது'

*மகேஸ்வரி விஜயனந்தன்*



தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் உள்ளவர்களுக்குத் தேர்தலில் வாக்களிக்கும் வாய்ப்பு இல்லையெனத் தெரிவித்த, வைத்திய சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்ஹ, இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களமும் ஆலோசனைகளை வழங்கியுள்ளது என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (3) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## துப்பாக்கி கொடுத்திருப்பது
# 'பல் துலக்க அல்ல'

80% வாக்களிப்பை எதிர்பார்ப்பதாக தேசப்பிரிய அறிவிப்பு

விடுமுறை வழங்காவிடின் உடன் முறையிடவும்

முழுச் செய்தி P2



## லொக்காவின் பூதவுடல்
# மதுரையில் தகனம்

### தஞ்சி, சுந்தரி, தனேஸ்வரன் கைது

இந்தியாவில் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும், இலங்கையில், ஒருங்கிணைக்கப்பட்ட குற்றச்செயல்களை முன்னெடுத்த பாதாள உலகக் கோஷ்டியின் தலைவரான, 'அங்கொட லொக்கா' என்றழைக்கப்படும், மத்துமகே லசந்த ஷமிந்திர பெரேராவின் கொலையை உறுதிப்படுத்தியுள்ள இந்திய ஊடகங்கள், அவரது பூதவுடல், மதுரையில் தகனம் செய்யப்பட்டதெனத் தெரிவித்துள்ளன.

தொடர்ச்சி P2

# 'இராஜதந்திர முறைமையில் நடவடிக்கை எடுத்துள்ளோம்'



அங்கொட லொக்கா விவகாரம் தொடர்பில், இராஜதந்திர முறைமையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# 'பார்வை குறைபாடானவர்களின் இரகசியத்தைப் பாதுகாக்கவும்'



பார்வைக் குறைபாடான வாக்காளர்கள், தங்களுடைய வாக்கை அளிப்பதற்காக, விசேட முறைமையொன்றை அறிமுகப்படுத்துமாறு கோரியுள்ள இலங்கை பார்வைக் குறைபாடானவர்களின் சங்கம், அவர்களின் இரகசியத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறும் கோரியுள்ளது.

தொடர்ச்சி P2

## பாடசாலைகளுக்கு
# 'இன்று முதல் தேர்தல் விடுமுறை'

*ஏ.எச்.ஏ. ஹுஸைன்*

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று செவ்வாய்க்கிழமை (04) முதல் இம்மாதம் 07ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு

தொடர்ச்சி P2



## கிருலப்பனையில்
# ஐ.தே.கவின் காரியாலயம் மீது தாக்குதல்

### பாதிக்கப்பட்டோரைப் பார்வையிட்டார் ரணில்

*மகேஸ்வரி விஜயனந்தன்*

கொழும்பு, கிருலப்பனைப் பிரதேசத்தில், ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் காரியாலயத்தின் மீது, இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால், காரியாலயத்திலிருந்த உபகரணங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2




பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்களாக, பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகள், சமூக மத்திய நிலையங்கள் உள்ளிட்டவற்றில், கிருமி தொற்றொழிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மத்திய நிலையங்களில், இரசாயன திரவம் தெளிப்பதுடன் புகைவிசிறுதலும் முன்னெடுக்கப்பட்டன. கல்முனை வாக்களிப்பு நிலையமொன்றில், புகைவிசிறப்பட்டது. (படம்: சகா)

# சிக்கிய பூனை தப்பியது



கொழும்பு-வெலிகடை சிறைச்சாலையின் முன்பாக, பூனையொன்று அங்குமிங்கும் உலாவித் திரிந்த நிலையில் பிடிக்கப்பட்டு, அறையொன்றில் அடைத்து வைக்கப்பட்டு இருந்தபோது, அங்கிருந்து அப்பூனை தப்பியோடிவிட்டதெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

# 7 வேட்பாளர்கள் உட்பட 440 பேர் கைது

தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டுகளின் கீழ், வேட்பாளர்கள் எழுவர் உட்பட 440 பேர் இதுவரையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத்

தொடர்ச்சி P2

# ரோந்து ஆரம்பம்

பொதுத் தேர்தல் தொடர்பிலான பொலிஸ் ரோந்து நடவடிக்கைகள், நேற்று (03) மாலை 6 மணிமுதல் ஆரம்பமாகியுள்ளன.

நியமிக்கப்பட்ட இடங்களுக்கு பொலிஸ் அதிகாரிகள் கட்டாயம் சென்றிருக்கவேண்டும் என்பதுடன், தேர்தல்

தொடர்ச்சி P2

## கொரோனா நோயாளர்கள்
# 2,824ஆக அதிகரிப்பு

புதிதாக இனங்காணப்பட்ட எட்டு நோயாளர்களுடன், கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை, 2,824ஆக அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2



நாட்டை முன்னேற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவு ஏற்றுமதி வர்த்தகரான உங்களுக்காக

ஏற்றுமதி வியாபாரக் கடன் தொடர்பாக 6% - 8% வரை குறைந்த வட்டி வீதம்

உங்கள் முன்னேற்றத்தின் ஒவ்வொரு படியிலும் மனப்பூர்வமாக இணைந்திருக்க செலான் வங்கியிடமிருந்து பல்வேறு நிதிச் சேவைகள்

- ஏற்றுமதி வர்த்தகரான உங்களுக்காக விசேட நிதித் தீர்வுகள்
- துரிதமான மற்றும் வினைத்திறன் மிக்க செயன்முறை
- உங்களுக்கென பிரத்தியேக வங்கிப் பிரதிநிதி சேவை

விசேட சலுகைகளுடன் நிதிச் சேவைகள் பற்றிய மேலதிக தகவல்களை அறிந்துகொள்ள

இன்றே அழையுங்கள் 011 2456 762/87

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

செலான் டவர்ஸ், இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03

Brand Finance Rating: "A+" Fitch Rating: A(lka) கம்பனி பதிவு இலக்கம்: PQ 9
செலான் வங்கியானது இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் ஓர் அனுமதி பெற்ற வர்த்தக வங்கியாகும்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# 'வாக்களிக்க முடியாது'

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், தனிமைப்படுத்தலில் 14 நாள்களுக்கு மேலதிகமாக தனிமைப்படுத்தலில் இருந்தவர்களும் கொரோனா சிகிச்சைப் பெற்று வீடுகளுக்குத் திரும்பியவர்களும் வாக்களிப்பு தினத்தன்று மாலை 4 மணிக்கு பிறகு தமது வாக்குகளை அளிக்கலாம் என்றார்.

**பொதுச்சுகாதார பரிசோதகர்கள், மாகாண, மாவட்ட மட்ட சுகாதாரப் பிரிவினர் உள்ளிட்ட சகல சுகாதாரப் பிரிவினர் தேர்தலில் கொரோனா தொற்று தடுப்பு செயற்பாடுகளுக்காக ஈடுபடவுள்ளனர். இவர்களுக்குத் தேவையான வசதிகளை ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது**

அவ்வாறான வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு, விசேட கூடமொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது மாத்திரம் சுகாதாரப் பிரிவின் அதிகாரியொருவர் உதவித் தேர்தல் அதிகாரியாக செயற்படுவார் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த அவர், இவ்வாறு வாக்களிக்க வருபவர்கள் பொது வாகனங்களைப் பயன்படுத்தாமல் தமக்கான தனியான வாகனத்தில் வாக்களிப்பு நிலையங்களுக்கு பயணிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

தேர்தலால் கொரானா தொற்று ஏற்படாமல் இருப்பதற்கான பொறுப்பு சுகாதாரப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இந்தத் தேர்தலுக்கான வாக்களிப்பால் கொரோனா தொற்று ஏற்படுவதை தடுப்பதே எமது நோக்கமாகும் என்றார்.

இதற்காக பொதுச்சுகாதார பரிசோதகர்கள், மாகாண, மாவட்ட மட்ட சுகாதாரப் பிரிவினர் உள்ளிட்ட சகல சுகாதாரப் பிரிவினர் தேர்தலில் கொரோனா தொற்று தடுப்பு செயற்பாடுகளுக்காக ஈடுபடவுள்ளனர். இவர்களுக்கு தேவையான வசதிகளை தேர்தல் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது என்றார்.

# 'பல் துலக்க அல்ல'



மகேஸ்வரி விஜயனந்தன்

வாக்களிப்பு நிறைவடைந்தவுடன் வாக்கெண்ணும் நடவடிக்கைகளை முன்னெடுக்காமல், மறுநாள் காலையிலிருந்து வாக்கெண்ணுவதால், வாக்குப்பெட்டிகளுக்கு என்ன நடக்குமென்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந் நிலையில், அச்சந்தேகத்தை தீர்க்கும் வகையில் பதிலளித்த தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, பொலிஸாருக்கு துப்பாக்கிகள் வழங்கியிருப்பது "பல் துலக்குவதற்கு அல்ல" என்றார்.

"வாக்களிப்பு நிலையங்களில் போலவே, வாக்கெண்ணும் நிலையங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படும்" என்றார்.

ஒகஸ்ட் 5ஆம் திகதி வாக்களிப்பு நடைபெறவிருக்கும் நிலையில், தனது இறுதி ஊடகச் சந்திப்பை மஹிந்த தேசப்பிரிய, அரசாங்கத் தகவல் திணைக்களத்தில், நேற்று (03) நடத்தினார். இதன்போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு சதவீதம் இம்முறை அதிகரிக்குமென நம்பிக்கைத் தெரிவித்துள்ள அவர், 80 சதவீத வாக்களிப்பை எதிர்ப்பார்ப்பதாகவும் அச்சமின்றி வாக்களிக்க, வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லுமாறும் வாக்காளர்களிடம் கேட்டுக்கொண்டார்.

**வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு, அந்த நிறுவன அதிகாரிகளால் வாக்களிப்பதற்கு விடுமுறை வழங்கப்படாவிட்டால், அதுதொடர்பில், தேர்தல் ஆணைக்குழுவுக்கு எழுத்துமூலமாக முறைப்பாடு செய்யப்பட்டால், அவ்வாறான நிறுவன உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம்**

"வாக்களிப்பு தொடர்பில் அச்சமும் கொள்ள வேண்டாம். கொரோனா தொற்று ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் வேண்டாம். அதேபோல், வாக்குப் பெட்டிகள் மாற்றப்படும் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை" என்றார்.

சகல வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குப் பெட்டிகளின் பாதுகாப்புக்கு தலா 2 பொலிஸாரும், அவர்களின் பாதுகாப்புக்கு இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்படுவர் என்றார்.

வாக்குப்பெட்டிகள் யாவும், அந்தந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு இன்று (4) மாலை 5 மணிக்குள் கொண்டுச் செல்லப்படுமெனத் தெரிவித் அவர், நாளை (5) காலை 7 மணிக்கு ஆரம்பமாகி, 5 மணிக்கு நிறைவடையும் வாக்களிப்பில் 80 சதவீத வாக்களிப்பை எதிர்ப்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, வெளியிடங்களில் தொழில் செய்யும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு, அந்த நிறுவன அதிகாரிகளால் வாக்களிப்பதற்கு விடுமுறை வழங்கப்படாவிட்டால், அதுதொடர்பில், தேர்தல் ஆணைக்குழுவுக்கு எழுத்துமூலமாக முறைப்பாடு செய்யப்பட்டால், அவ்வாறான நிறுவன உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்றார்.

வாக்களிப்பதற்கு விடுமுறை வழங்காமை தொடர்பில், கடிதம் மூலம் எமக்கு முறைப்பாடு செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்ட அவர், இது நீண்டகாலமாக இருக்கும் பிரச்சினையாகும் என்றார்.

# 2,824ஆக அதிகரிப்பு

இனங்காணப்பட்ட இந்த எட்டுப் பேரில், ஒருவர், லங்காபுர புனர்வாழ்வு மத்திய நிலையத்தில், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான கைதியொருவருக்கு நெருக்கமானவர் எனவும் அவர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர் எனவும் அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏனைய 07 பேரும், ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து இலங்கை வந்து தனிமைப்படுத்தப்பட்டவர்கள் ஆவார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 75 பேர் நேற்று முன்தினம் (02) பூரணமாகக் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, 2,517 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் நோயாளர் 296 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், இதுவரை 11 கொரோனா வைரஸ் நோயாளர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஐ.தே.கவின்...

அந்தத் தாக்குதலில், ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் டைட்டஸ் பெரேராவும் காயமடைந்துள்ளார் எனத் தெரிவித்த, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க, தேர்தல் அமைதிக் காலத்திலேயே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார். சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பார்வையிட்டு ஆறுதல் கூறினார். அத்துடன், சேதமாக்கப்பட்ட காரியாலயத்தையும் பார்வையிட்டார்.

இந்நிலையில், தேர்தல் அமைதிக் காலத்தில், நேற்று (03) மாலை வரையிலும், 09 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளனவென, மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார்.

தேர்தல் அமைதிக் காலம் நேற்று முன்தினம் (2) நள்ளிரவு 12 மணியுடன் ஆரம்பமாகியுள்ளது. அந்த அமைதிக் காலம், தொடர்பில் கேட்டபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புத்தளம், குருநாகல் ஆகிய பிரதேசங்களில் அமைதிக் காலத்திலும் தேர்தல் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. துண்டுப்பிரசுரங்கள் விநியோகம் உள்ளிட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேவேளை, நுவரெலியா மாவட்டத்திலேயே தேர்தல் வன்முறைகள் எதுவும் அமைதிக் காலத்தில் பதிவாகவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# லொக்காவின்...

இதேவேளை, அங்கொட லொக்காவுக்குப் போலியான ஆவணங்கள் தயாரித்து உதவிபுரிந்த குற்றச்சாட்டில், கோயம்புத்தூர் சிட்டி பொலிஸாரால், பெண்கள் இருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கொட லொக்காவுடன் இருந்த கொழும்பைச் சேர்ந்த அமானி தஞ்சி (27 வயது), மதுரையைச் சேர்ந்த சிவகாமி சுந்தரி (36 வயது), தற்போது திருப்பூரில் வசித்து வரும் ஈரோடைச் சேர்ந்த எஸ். தனேஸ்வரன் (32 வயது) ஆகியோரே, கோயம்புத்தூர், பீலமேடு பொலிஸாரால், நேற்றுமுன்தினம் (02) கைது செய்யப்பட்டுள்ளனர்.

"பிரதீப் சிங்" எனத் தனது பெயரை மாற்றிக்கொண்ட அங்கொட லொக்கா, இந்தியப் பிரஜைக்கான ஆதார் அட்டையையும் பெற்று, தலைமறைவாக இருந்தாரென பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அம்மூவருக்கு எதிராகவும் குற்றவியல் சதி, ஆவணங்களை மோசடி செய்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களில் ஒருவரான சுந்தரி, தனது உறவினரான பிரதீப் சிங் மாரடைப்பால் இறந்துவிட்டார் எனத் தெரிவித்து, ஆதார் அட்டையின் பிரதியை, பீலாமேடு பொலிஸாரிடம் ஜூலை 4ஆம் திகதியன்று கையளித்துள்ளாரென, பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆதார் அட்டை, போலியானதெனக் கண்டறிந்ததன் பின்னர், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, சேர் நகரில் அமானியுடன் தங்கியிருந்த அங்கொட லொக்காவுடையது என்பதைக் கண்டறிந்தனர் என, அந்தத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சந்தேக நபரான அமானியின் தகவலின்படி, "நெஞ்சு வலியெனத் தெரிவித்து, தனியார் வைத்தியசாலையில் ஜூலை 3ஆம் திகதியன்று அனுமதிக்கப்பட்ட அங்கொட லொக்கா மரணமடைந்தார். பிரேத பரிசோதனை, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் மறுநாள் மேற்கொள்ளப்பட்டது. பிரேத பரிசோதனை நடைமுறையைப் பூர்த்தி செய்ய, சுந்தரி, ஜூலை 4ஆம் திகதி பொலிஸாரை அணுகினார். அதன்பின்னர், மதுரையில் இறுதிக்கிரியை இடம்பெற்றது எனவும் தெரியவந்தது." எனத் தெரிவிக்கப்படுகிறது.

"இறந்தவரின் உள்ளூறுப்பு மாதிரிகளின் ஆய்வக முடிவுக்காகக் காத்திருக்கிறோம்" எனக் கோயம்புத்தூர் பிரதி பொலிஸ் ஆணையாளர் ஜி. ஸ்டாலின் தெரிவித்தாரென அந்தத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கொட லொக்கா, அவருடன் இருந்த பெண்ணொருவரால் நஞ்சூட்டி, இந்தியாவில் படுகொலை செய்யப்பட்டார் என்றும், அவருடன் நெருங்கியிருந்த பெண்ணொருவர் தலைமறைவாகிவிட்டாரெனவும், உள்ளூர் ஊடகங்களில், ஜூலை 23ஆம் திகதியன்று செய்திகள் வெளியாகியிருந்தன.

# 'இராஜதந்திர...

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், 'அங்கொட லொக்கா' என்றழைக்கப்படும், மத்துமகே லசந்த ஷமிந்திர பெரேரா, மரணமடைந்துவிட்டார் என்பதை, இந்திய பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர் அதுதொடர்பில், ஸ்ரீ லங்கா பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதா எனக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கொட லொக்கா, மரணமடைந்துவிட்டார் என்றோ, அவருடைய பெயர் மாற்றப்பட்டுள்ளது என்றோ எங்களுக்கு உறுதிப்படுத்தப்படவில்லையெனத் தெரிவித்த பேச்சாளர், இராஜதந்திர முறைமையின் கீழ், நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

# 'பார்வைக்...

"பார்வைக் குறைபாடான வாக்காளர்கள் தங்களுடைய வாக்குகளை அளிப்பதற்காக, உதவியாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். எனினும், இங்கு இரகசியத் தன்மை குறித்தும், வாக்காளரால் குறிப்பிடப்படும் சின்னத்துக்கும் விருப்பிலக்கங்களுக்கும் மிகச்சரியாக வாக்களிக்கப்படுகிறதா என்பது தொடர்பில், உறுதிப்படுத்த முடியாதுள்ளது" என அச்சம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உத்தியோகபூர்வ வாக்காளர்கள் அட்டைகள், இதுவரையிலும் கிடைக்காதவர்கள், இன்றும் (04) நாளையும் (05) தபால் அலுவலகங்களுக்குச் சென்று, பெற்றுக்கொள்ளமுடியுமென அறிவித்துள்ள தபால் திணைக்களம், இவ்விரு நாள்களிலும் தபால் அலுவலகங்கள், உப-தபால் அலுவலகங்கள் திறந்திருக்குமெனவும் அறிவித்துள்ளது.

தபால் அலுவலகம், உப-தபால் அலுவலகத்துக்குச் சென்று, தங்களுடை ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி, உத்தியோகபூர்வ வாக்காளர்கள் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதித் தபால் மா அதிபர் ராஜித ரணசிங்ஹ தெரிவித்தார்.

# 'இன்று முதல்...

அறிவித்துள்ளது.

அதனடிப்படையில், ஒகஸ்ட் 4ஆம், 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

ஜூலை 27ஆம் திகதி, 11ஆம், 12ஆம், 13ஆம் தர மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக, நாடாளாவிய ரீதியிலுள்ள அனைத்து அரசாங்கப் பாடசாலைகளும் மீள ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

அதேவேளை, ஏனைய தரங்களுக்கான கல்வி நடவடிக்கை, ஒகஸ்ட் 10ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும்போது, சுகாதார வழிகாட்டுதல்கள் அவசியமாகக் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்யுமாறு, அனைத்துக் கல்வி அதிகாரிகளையும் கல்வியமைச்சு வலியுறுத்தியுள்ளது.

# சிக்கிய பூனை தப்பியது

இந்தப் பூனை, சிறைச்சாலைக்குள் போதைப்பொருள்கள், சிம் அட்டைகள் உள்ளிட்ட சட்டவிரோதமான பொருள்களைக் கடத்துவதற்கு, பயிற்சியளிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல்களை அடுத்து, சனிக்கிழமை (01) பிடிக்கப்பட்ட பூனையின் கழுத்தில் சிறிய பொதியொன்று கட்டப்பட்டிருந்தது. அதற்குள், 1 கிராம் 7 மில்லி கிராம் ஹெரோய்ன், சிம் அட்டைகள் இரண்டு, மெமரி அட்டையொன்று இருந்துள்ளன.

மேலதிக தகவல்களைத் திரட்டுவதற்காக, அறையொன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்த போதே, இந்தப் பூனை தப்பியோடிவிட்டதென அறியமுடிகின்றது.

இந்தப் பூனையின் ஊடாக, எந்தக் கைதிக்குப் போதைப்பொருள்கள் உள்ளிட்ட சட்டவிரோதமான பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டன என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனச் சிறைச்சாலைகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



மேலதிக விசாரணைகளுக்காக, பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பூனையே, இவ்வாறு தப்பியோடிவிட்டது.

**பாதாளக் குழுவின் தலைவரான அங்கொட லொக்காவால் போதைப்பொருள்களை விநியோகிப்பதற்காகப் பயிற்சி அளிக்கப்பட்டதாகக் கூறப்படும், கழுகொன்று, மீகொட–நாவலமுல்ல, மயான வீதியிலுள்ள விலங்குப் பண்ணையொன்றிலிருந்து ஜூலை 30ஆம் திகதியன்று, அத்துருகிரிய பொலிஸாரால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது**

அப்பூனையைத் தேடி, வலைவிரிக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பாதாளக் குழுவின் தலைவரான அங்கொட லொக்காவால் போதைப்பொருள்களை விநியோகிப்பதற்காகப் பயிற்சி அளிக்கப்பட்டதாகக் கூறப்படும், கழுகொன்றும் மீகொட- நாவலமுல்ல, மயான வீதியிலுள்ள விலங்குப் பண்ணையொன்றிலிருந்து ஜூலை 30ஆம் திகதியன்று, அத்துருகிரிய பொலிஸாரால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 7 வேட்பாளர்கள்...

தெரிவித்துள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன, தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில், 8 சம்பவங்கள் நேற்று முன்தினம் (03) பதிவாகியுள்ளன. அச்சம்பவங்கள் தொடர்பில் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், இதுவரைக்கும் நான்கு வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றார்.

தேர்தல் தொடர்பான குற்றச்செயல்கள் தொடர்பில், 93 முறைப்பாடுகள் இதுவரையில் கிடைத்துள்ளன. 268 தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், அரச வாகனங்கள் மூன்று உட்பட, 124 வாகனங்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர் என்றார்.

# ரோந்து ஆரம்பம்

தொடர்பிலான சட்டத்திட்டங்கள் உள்ளிட்டவை தொடர்பில் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் குடும்ப சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பொது சுகாதார பணியாளர் நிறுத்திவைக்கப்படுவர் என பொது சுகாதார சங்கம் அறிவித்துள்ளது.

# ‘அநுராதபுரத்தில் அரச காணிகள் அபகரிப்பு’

அநுராதபுரத்தில், அரச நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான பெருமளவு காணிகளை, அரசியல்வாதிகளின் சகாக்கள் அபகரித்துக் கொண்டுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர், அநுராதபுரத்திலுள்ள அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளை அபகரிப்பவர்களுக்கு, அரசியல் சக்திகளின் அனுசரணை கிடைக்கின்றனவெனவும் அதனால், அநுராதபுரம் சென். ஜோசப் பாடசாலைக்குச் செல்லும் பாதைளையும் சிலர் அபகரித்துகொண்டுள்ளனர் என்றார்.

அதேபோல், நொச்சியாகம வித்யாதர்ஷி பாடசாலை, மதவாச்சி இக்கிரிகொலலாவ வித்தியாலயம் ஆகியவற்றுக்குச் சொந்தமான காணிகளும் அபகரிக்கப்பட்டுள்ளனவெனத் தெரிவித்த அவர், முன்பு அநுராதபுரத்தின் பாடசாலைகளுக்குச் சொந்தமாகக் காணப்பட்ட விவசாய நிலங்களையும், இன்றும் அரசியல்வாதிகளின் சகாக்கள் அபகரித்துள்ளனர் என்றார்.

அத்தோடு, அநுராதபுரத்தில் ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள், நீர்வளங்கள் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள், ரஜரட்ட பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான காணிகள் என்பனவும்



அபகரிக்கப்பட்டுள்ளனவெனவும் 90 சதவீதமான அரச காணிகள் அநுராதபுரத்துக்குள் அபகரிக்கப்பட்டுள்ளவெனவும் தெரிவித்தார்.

அதேநேரம், அநுராதபுரத்திலுள்ள அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளுக்கான சரியான உரித்துகள் இல்லாமையே இந்நிலைக்குப் பிரதான காரணமென வடமத்திய மாகாணச் செயலாளர் எச்.எம்.பி. பண்டார தெரிவித்தார்.

அரசியல் கூட்டங்களில் கலந்துகொண்ட

## 10 அதிகாரிகள் பதவி நீக்கம்

நாளை (05) நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்களில் உள்ள சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட தேர்தல் அதிகாரிகளின் பணிகளும் பயிற்சிகளும், தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளன.

வாக்குப் பெட்டிகளை வழங்கும் நடவடிக்கைகள் இன்று (04) முன்னெடுக்கப்படுமென, மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

அத்துடன், இம்முறை வாக்குகளை எண்ணும் பணிகள், 4 மத்திய நிலையங்களில் நடைபெறுமென, கொழும்பு மாவட்டச் செயலாளர் ப்ரதீப் யசரத்ன தெரிவித்தார்.

இன்று (04) பிற்பகல் 1 மணிக்கு முன்னர், வாக்குச் சாவடிகளுக்கு சிரேஷ்ட வாக்குப் பதிவு நிலைய அதிகாரிகள் அனுப்பிவைக்கப்படுவரென, அநுராதபுரம் மாவட்டச் செயலாளர் ஆர்.எம். வன்னிநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், களுத்துறை மாவட்டத்தில் உள்ள மூன்று வாக்குச் சாவடிகளில், வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்று, மாவட்டச் செயலாளர் யூ.டி.சி ஜெயலால் தெரிவித்தார்.

மேலும், தேர்தல் கடமைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 சிரேஷ்ட வாக்குச்சாவடி அதிகாரிகள் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக வேறு குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனரென, நுவரெலியா மாவட்டச் செயலாளர் ரோஹன புஷ்பகுமார தெரிவித்தார்.

அவர்கள், அரசியல் கட்சிகளின் கூட்டத்தில் கலந்துகொண்டதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்தே, அவர்கள் நீக்கப்பட்டுள்ளனர் எனவும், ரோஹன புஷ்பகுமார தெரிவித்தார்.

‘ஏமாற்றி வெளியில் வரவழைத்து

## சம்பாயோவை கைது செய்தோம்’

தந்திரோபாயமான புலனாய்வு நடவடிக்கையினூடாக, நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் அதிகாரி அநுருத்த சம்பாயோ மறைந்திருந்த இடத்திலிருந்து அவரை வெளியில் எடுப்பதற்கு முடிந்தது. அதன் பின்னரே, அவரைப் பொலிஸார் கைது செய்தனரென, பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில், நேற்று (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், கைது செய்யப்பட்ட சந்தேகநபர், போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பை வைத்திருந்தமை தெரியவந்துள்ளதாகவும் கூறிய அவர், மறைந்திருந்த சம்பாயோவை ஏமாற்றி அவரை வெளியில் வரவழைத்துப் பின்னர் கைது செய்ததாகவும், இவர் போலியான ஆவணங்கள் பலவற்றைத் தயாரித்திருப்பதாகவும் கூறினார்.

அரசியல்வாதிகளுடன் சம்பாயோ தொடர்பு வைத்திருந்தாரா என்பது தொடர்பில், இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தகவல் இல்லை எனவும் கூறினார்.

பொதுத்தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் நிறைவு;

## ரோந்து நடவடிக்கைகளில் பொலிஸார்

பொதுத் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளனவெனத் தெரிவித்த தேர்தல் ஆணைக்குழு, தேர்தல் சட்டத்தை மீறுபவர்களை கைதுசெய்யும் நடவடிக்கை, நேற்று (03) முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளனவெனவும் தெரிவித்துள்ளது.

22 தேர்தல் தொகுதிகளில் அங்கிகரிக்கப்பட்ட 20 அரசியல் கட்சிகள், 34 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 452 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.

அத்துடன், 62 இலட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். நாடளாவிய ரீதியில் 12 ஆயிரத்து 984 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்முறை, கொரோனா வைரஸ் தொடர்பான சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றியே தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கமைய, நேற்று (03) வாக்குச் சாவடிகளில் கிருமிதொற்று நீக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், மாவட்டச் செயலகங்களிலிருந்து வாக்குப் பெட்டிகளை இன்று (04) அனுப்பிவைக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, வானிலையால் தேர்தல் செயற்பாடுகளுக்கு தடைய ஏற்படாதவாறு முன்னேற்பாடுகளை




**“அமைதி காலத்தில் தேர்தல் சட்டத்தை மீறிய செயற்பாடுகளை இடம்பெறுகின்றனவா என்பதை கண்காணிக்க, பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்**

செய்துள்ளதாகவும் களுத்துறை மாவட்டச் செயலாளர் யூ.டீ. சீ.ஜயலால் தெரிவித்தார்.

தேர்தல் கடமைகளுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த சில சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய அதிகாரிகளை தேர்தல் கடமைகளிலிருந்து விலக்குவதற்கு நுவரெலிய மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி உறுப்பினர்கள் குறித்ததொரு கட்சியின் கூட்டமொன்றில் கலந்துகொண்டதாலேயே தேர்தல் கடமைகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என தெரிவத்தாட்சி அதிகாரி ரோஹன புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இதுவரையில் தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பாக 264 முறைபாடுகள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளனவெனவும், அவற்றுடன் தொடர்புடைய 07 வேட்பாளர்கள் உட்பட 440 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அமைதி காலத்தில் தேர்தல் சட்டத்தை மீறிய செயற்பாடுகளை இடம்பெறுகின்றனவா என்பதை கண்காணிக்க, பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஐடிஎச்சில்

## புதிய சிகிச்சைப் பிரிவை நிறுவத் தீர்மானம்

நோயாளர்களை தனிமைப்படுத்தி சிகிச்சையளிப்பதற்கான வசதிகளுடன் கூடிய பிரிவொன்றை அங்கொடை தேசிய தொற்றநோயியல் நிறுவனத்தில் ஸ்தாபிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் கொவிட் - 19 அவசர சிகிச்சை, சுகாதார திட்டமிடற் பிரிவின் பணிப்பாளர், வைத்திய நிபுணர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை பொதுத் தேர்தல் நிறைவடைந்த பின்னர் ஆரம்பிக்கவுள்ளதாகவும்,




எதிர்வரும் 3 மாதங்களில் முதற்கட்ட பணிகளை ஆரம்பிக்க முடியும் எனவும் வைத்தியர் நிபுணர் ஜயருவன் பண்டார கூறியுள்ளார்.

2021ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது 2022ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இதன் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



## யவ்ம்-இ-இஸ்திஹ்சால் நிகழ்வு

சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட ஜம்மு & காஷ்மீர் (IIOJK) இன் இந்திய இராணுவ முற்றுகையின் ஒரு வருடத்தை குறிக்கும் வகையில் “யவ்ம்-இ-இஸ்திஹ்சால்” என்ற தொனிப்பொருளில் ஒரு நிகழ்வை இலங்கையில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்திருந்தது.

சஹ்ரானுக்கு

## ‘ஐ.எஸ்ஸுடன் தொடர்புள்ளதென சாகல ரத்நாயக்கிவிடம் கூறினேன்’

ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் சித்தாந்தத்தைக் கொண்டிருந்தவர்கள், ஐ.எஸ் அமைப்பில் இணைந்தவர்கள், நாட்டுக்குள் தீவிரவாத போதனைகளைக் கற்பித்த சில மதரசா பாடசாலைகள் குறித்து தேசிய புலனாய்வுத்துறை, முன்னாள் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவுக்கு 2016 ஒகஸ்டில் தகவல் வழங்கியுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கிய தேசிய புலனாய்வுத் துறையின் முன்னாள் தலைவர், சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜெயவர்தன இந்தத் தகவலை வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

அந்தவகையில் முதலில் சிரியாவுக்குச் சென்று ஐ.எஸ் அமைப்பில் சேர்ந்த ‘இஷாக் அகமட்’ பற்றியும், இஷாக்கின் வழிகாட்டுதலின் கீழ் சிரியாவுக்குச் சென்ற அவரது சகோதரர் ‘நிலாம்’ குறித்தும் சாகல ரத்நாயக்கவுக்கு தேசிய புலனாய்வுத்துறை தகவல் அளித்ததாகக் கூறியுள்ளார்.

மேலும் ‘டார்க் வெப்’ ஐப் பயன்படுத்தி பல தீவிரவாத அமைப்புகளால் செய்யப்பட்ட பரிவர்த்தனைகள் தொடர்பான தகவல்களையும், இந்த பரிவர்த்தனைகளில் பெரும்பாலானவை கிரிப்டோகரன்ஸியைப் பயன்படுத்தி நடைபெற்றன என்பதையும் தேசிய புலனாய்வுத் துறை அறிந்துகொண்டதாக தெரிவித்துள்ளார்.

## ஹெரோயினுடன் கைதானோரை தடுத்துவைத்து விசாரிக்க உத்தரவு

பொரலஸ்கமுவயில் ஒரு கிலோகிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரை தடுத்து வைத்து விசாரிப்பதற்கு நீதிமன்ற உத்தரவை கங்கொடவில நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

பொலிஸாருக்கு, நேற்று (02) மதியம் கிடைத்த தகவலுக்கமைய காரொன்றின் மூலம் ஹெரோய்னை கொண்டுசென்ற சந்தர்ப்பத்தில் சந்தேக நபர்கள் இருவரும் 500 கிராம் நிறையுடைய ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டனர்.

இதன்பின்னர் சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், அவர்கள் தற்காலிகமாகத் தங்கியிருந்த கோட்டையில் அமைந்துள்ள வீட்டிலிருந்து மேலும்



600 கிராம் ஹெரோய்ன், 300 போதைவில்லைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, அஹுங்கல்ல பகுதியில் வீடொன்றில் இருந்து 4 கிராம் 130 மில்லிகிராம் ஹெரோய்ன் மற்றும் ஆறு இலட்சத்து 95 ஆயிரம் ரூபா பணத்துடன் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

கர்நாடகா முதலமைச்சர்

## எடியூரப்பாவுக்கு கொரோனா

இந்தியாவின் கர்நாடக மாநில முதலமைச்சர் எடியூரப்பாவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வருகிறார்.

எடியூரப்பாவின் வீட்டில் பணியாற்றிய சிலருக்கு கடந்த சில நாள்களுக்கு முன்பு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதோடு, அவர்கள் உடனடியாகத் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து எடியூரப்பாவுக்கு மேற்கொள்ளப்பட்டப் பரிசோதனைகளில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

எனினும் கடந்த சில நாள்களாக எடியூரப்பா பல்வேறு நிகழ்வுகளில் அவர் கலந்துகொண்டதுடன், கர்நாடக ஆளுநர் வஜுபாய் வாலாவையும் சந்தித்திருந்தார்.

## உத்தியோகபூர்வமற்ற தேர்தல் முடிவுகளை வெளியிடத் தடை

நாடாளுமன்றத் தேர்தலின் அத்தாட்சிப்படுத்திய உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளை ஒளி/ஒலிபரப்புச் செய்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற வேண்டுமென சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ அறிவிப்புகளை வெளியிடுவதற்கு, ஊடக நிறுவனங்கள் முன்கூட்டிய உரிய கொடுப்பனவை செய்து தம்மை பதிவு செய்துகொள்ள வேண்டுமெனவும் தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, இவ்வாறு பதிவு செய்துகொள்ளும் பட்சத்தில் உடனுக்குடன் பாதுகாப்பான கணினி வலையமைப்பொன்றின் ஊடாக உடனுக்குடன் தகவல்கள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலின்போது ஊடகங்கள் உத்தியோகபூர்வமற்ற தகவல்களை வெளியிட்டதால், தேர்தல் முடிவுகள் மீதான பொதுமக்களின் நம்பகத்தன்மை முறிவடைந்தது. எனவே உத்தியோகபூர்வமற்ற தேர்தல் முடிவுகளை ஊடகங்கள் வெளியிடுவதைத் தவிர்க்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**பொது அறிவித்தல்**

2007ஆம்ஆண்டு7ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவஜ 9இன்கீர் கீர்வரும் கம்பனிகள் வுட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறொம்

1. பெயா: **Zeenath Fasteners (Private) Limited**
பதிவஜ இலக்கம் :PV 00224269
பதிவஜ முகவரி : No. 65, Pradeepa Mawatha, Colombo 10.

2. பெயா: **Empire Gas Distributors(Private) Limited**
பதிவஜ இலக்கம் : PV 00224864
பதிவஜ முகவரி : No. 04, Gnanaloka Mawatha, Egoda Uyana, Moratuwa.

கம்பனி செயலாளர்
0772267288

**ஆறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: **HOMA MADE FOOD PRODUCTS (PVT) LTD**

பதிவிலக்கம்: **PV 00225120**

பதிவு முகவரி: இல. 180-1/125, பிபல்ஸ் பார்க் சொப்பிங் கொம்ப்லெக்ஸ், கொழும்பு - 11

செயலாளர்

# யாழ். தேர்தல் முடிவுகள் 12 மணிக்கு முன் வெளியாகும்?

■ எம்.றொசாந்த், என்.ராஜ், டி.விஜிதா



யாழ்ப்பாணத் தேர்தல் முடிவுகள், 6ஆம் திகதி மதியத்துக்கு முன்னர் அறிவிக்கப்பட்டு விடுமென, யாழ். தேர்தல் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகரும் மாவட்டச் செயலாளருமான க. மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில், நேற்று (03) நடைபெற்ற கட்சி பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலை அடுத்து, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**“கட்சிகளின் சின்னங்கள், வேட்பாளர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட பேனாக்களை வாக்களர்களுக்கு விநியோகிக்க வேண்டாம். இம்முறை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றும் முகமாக, வாக்காளர்கள் கறுப்பு அல்லது நீல நிற மை பேனாக்களை வாக்களிக்க வரும் போது கொண்டுவருவது விரும்பத்தக்கது**

அங்கு தொடர்ந்துரைத்த அவர், யாழ். மாவட்டத்தில் தேர்தல் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவெனவும், செவ்வாய்க்கிழமை (04) காலை, வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைக்கப்படுமெனவும் கூறினார்.

சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு வாக்களிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவெனத் தெரிவித்த அவர், மறுநாள் 06ஆம் திகதி காலை 07 மணிக்கு வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பமாகுமெனவும் கூறினார்.

“முன்னதாக தபால் மூல வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றின் முடிவுகள் 08 மணிக்கு முதல் அறிவிக்க முடியும் என எதிர்பார்க்கிறோம். அதன் பின்னர் ஏனைய வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, மதியம் 12 மணிக்கு முதல் வாக்கெண்ணும் பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கிறோம்” எனவும், க. மகேசன் தெரிவித்தார். மேலும், கட்சி அலுவலகங்களின் முன்பாக உள்ள சின்னங்களை அகற்றுமாறும், அவர் கேட்டுக்கொண்டார்.

அமல்ராஜ்:

இதேவேளை, கட்சிகளின் சின்னங்கள், வேட்பாளர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட பேனாக்களை வாக்களர்களுக்கு விநியோகிக்க வேண்டாமென, கட்சிகளின் பிரதிநிதிகளிடம் யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

“இம்முறை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றும் முகமாக, வாக்காளர்கள் கறுப்பு அல்லது நீல நிற மை பேனாக்களை வாக்களிக்க வரும் போது கொண்டுவருவது விரும்பத்தக்கது” எனவும், அமல்ராஜ் தெரிவித்தார்.

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிப்பு

■ சுதத் எச்.எம்.ஹேவா



மலையகத்தில் நீடித்துவரும் சீரற்ற வானிலை காரணமாக காசல்ரீ, மவுசாகல்ல ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்துள்ளதாக நீர்த்தேக்கத் திட்டங்களின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 14 அடி 4 அங்குலமும் மவுசாகல்ல நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 19 அடி 9 அங்குலமும் உயர்வடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளில் நிலவும் மழை வானிலையால், நீர்த்தேக்கங்களில் நீர் நிலைகள் படிப்படியாக உயர்ந்து வருவதாகவும் நீர்த்தேக்கங்களிலிருந்து அதிகபட்ச நீர் மின்சாரம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் 18 உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய

# 1,785,964 பேர் வாக்களிக்கத் தகுதி

கம்பஹா மாவட்டத்தில் 18 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக, 1,785,964 பேர் வாக்களிப்பதற்குத் தகுதிபெற்றுள்ளனர் என்று, மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரி தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலை விட இந்த எண்ணிக்கை 34,092ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில், அதிக வாக்காளர்கள் கம்பஹா மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் 54,098 பேர் தபால்மூலம் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் இம்மாவட்டத்தில் 1,188 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் 27,339 பேர் தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ளனர் என்றும் பாதுகாப்புப் பணிகளுக்காக 6,000 பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

அமைதி காலத்தில்

# ‘அடங்கமறுக்கும் அரசியல்வாதிகள்’

தேர்தல் அமைதி காலத்தில், அனைத்து அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும், தேர்தல் சட்டத்திட்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டுமென, கபே அமைப்பின் இயக்குநர் சுரங்கி ஆரியவங்ச வலியுறுத்தினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், இந்த அமைதி காலப்பகுதியில், பல அரசியல் கட்சிகள் மிக தந்திரமாக வேட்பாளர்களை ஊக்குவிக்கும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனவெனக் குற்றஞ்சாட்டினார்.

அனைத்துக் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் சம அளவில் ஆள்களத்தை உருவாக்குவதற்கும் வாக்கெடுப்பில் தேவையற்ற செல்வாக்கைத் தடுப்பதற்காகவும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்குமே, தேர்தல் அமைதி காலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். “இருப்பினும், அக்காலக்கட்டத்தில் பல அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும், தந்திரோபாயமாக அதாவது, கோவில் உற்சவங்கள், விழாக்களை ஏற்பாடு செய்து, வேட்பாளர்களை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றன” எனவும், அவர் தெரிவித்தார்.



# எசல பெரஹெராவுக்கான ஆயத்தம்

கண்டி ஸ்ரீ தலதாமாளிகையின் எசல பெரஹெரா, நேற்று (3) இரவு நடைபெற்ற நிலையில், பெரஹெரா ஊர்வலத்தில் பங்கேற்ற யானைகளை, நீராட்டி ஆயத்தப்படுத்தும் பணிகளில் யானைப் பாகன்கள் ஈடுபட்டனர்.

(படப்பிடிப்பு; குஷான்பதிராஜ)

தேர்தலுக்கான ஏற்பாடுகள்

# புத்தளம் மாவட்டத்தில் பூர்த்தி

■ ரஸீன் ரஸ்மின்



பொதுத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக, புத்தளம் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்டச் செயலாளருமான சந்திஸ்ரீ பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்துரைத்த அவர், புத்தளம் மாவட்டத்திலுள்ள 5 தேர்தல் தொகுதிகளிலும் இருந்து 8 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக இந்தத் தேர்தலில் பிரதான அரசியல் கட்சிகள் சுயேச்சைக்குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், 374 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், புத்தளம் மாவட்டத்தில் 6 இலட்சத்து 17 ஆயிரத்து 370 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இந்தத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் வாக்களிப்பதற்காக 421 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன், இம்முறை புத்தளம் மாவட்டத்தில் 13 ஆயிரத்து 932 பேர் தபால்மூல வாக்களிப்பில் பங்கேற்றனர்.

இந்நிலையில், 88 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளனஅமைக்கப்பட்டுள்ளன.

அத்தோடு, தேர்தல் கடமைகளுக்காக 5,800 அரச உத்தியோகத்தர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இதுதவிர, 2600க்கும் அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

கற்பிட்டி முகத்துவாரத்தில் சுமார் 725க்கும் அளவான வாக்காளர்கள் இருக்கின்ற போதிலும் அவர்களுக்கு வாக்களிப்பதற்காக முகத்துவாரத்தில் ஒரு வாக்குச்சாவடி அமைக்கப்படவுள்ளதுடன், 215 வாக்காளர்களைக் கொண்ட பூக்குளம் கிராமத்திலும் ஒரு வாக்குச்சாவடி அமைக்கப்படவுள்ளது. இரண்டு பகுதிகளில் இருந்தும் வாக்குப்பெட்டிகளைக் கொண்டுவருவதற்கு கடற்படையினரின் உதவிகளையும் பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

லங்காபுரயில்

# 90 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்



பொலன்னறுவை, லங்காபுர பிரதேச சுகாதார அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான ஒருவர் அடையாளங் காணப்பட்டதையடுத்து அவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிவந்த 19 குடும்பங்களைச் சேர்ந்த 90 பேர் தமது வீடுகளிலேயே சுயத்தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று, பொலன்னறுவை சுகாதார வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் டபிள்யூ.கே.டபிள்யூ.குமாரவங்ச தெரிவித்தார்.

மேற்படி 90 பேரும் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படிப் பிரதேசத்தில் சிவில் பாதுகாப்பு அதிகாரி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது, பிசிஆர் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இதனையடுத்தே, அவருடன் நேரடி தொடர்பைப் பேணிய 90 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மேற்படி அதிகாரியின் மனைவி மற்றும் மகள், பிசிஆர் பரிசோதனைக்காக பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று, வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் டபிள்யூ.கே.டபிள்யூ.குமாரவங்ச மேலும் தெரிவித்தார்.

பிசிஆர் பரிசோதனைகள்

# ஒரு இலட்சத்து 62 ஆயிரத்தைத் தாண்டின

நாட்டில் தற்போது வரையிலானக் காலப்பகுதியில், ஒரு இலட்சத்து 62 ஆயிரத்து 90 பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று, கொவிட்-19இக்கான தேசியத் தடுப்பு மய்யம் அறிவித்துள்ளது.

**“முப்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள 33 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில், 2 ஆயிரத்து 294 பேர் தொடர்ந்து தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்**

முப்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள 33 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில், 2 ஆயிரத்து 294 பேர் தொடர்ந்து தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று, கொவிட்-19இக்கான தேசியத் தடுப்பு மய்யம் மேலும் தெரிவித்துள்ளது.

அமைதி காலத்தில் தேர்தல் பிரசாரம்;

# 3,574 முறைப்பாடுகள் பதிவு

தேர்தல் பிரசாரப் பணிகள், நேற்று முன்தினம் (2) நள்ளிரவுடன் நிறைவுற்ற நிலையில், நள்ளிரவு முதல் நேற்று (3) காலை 9 மணிவரையான 9 மணித்தியாலங்களுக்குள் சமூக ஊடகங்களில் தேர்தல் விளம்பரங்களைப் பிரசுரித்தமை தொடர்பில் 940 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று, தேர்தல் தொடர்பில் கண்காணிக்கும் பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தல் திணைக்களத்தால், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, இதுவரை 140 விளம்பரங்கள் அகற்றப்பட்டுள்ளன என்று பெப்ரல் அமைப்பின் அத்தியட்சகர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மேற்படி நிறுவனத்தில், நேற்று (3) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் விதிமுறைகைள மீறும் வகையில், பேஸ்புக் பக்கத்திலேயே அதிகளவான விளம்பரங்கள் பதிவிடப்பட்டிருந்தன எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை சுகாதார நடைமுறைகளை மீறியமை தொடர்பில், 2,483 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் வெறுக்கத்தக்கப் பேச்சுகள் தொடர்பாக 30 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

பெண் வேட்பாளர்களைத் துன்புறுத்தியமை தொடர்பில் 75 முறைப்பாடுகளும் தவறான தகவல்களை வழங்கியமை தொடர்பில் 45 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றார்.

சமூக ஊடகங்கள் மீதான தேர்தல் கண்காணிப்பின்போது, இந்தத் தகவலை பெப்ரல் வெளியிட்டுள்ளதாகவும், இது குறித்து எதிர்காலத்தில் தொடர்புடைய நிறுவனங்களுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.



ஐ.தே.க வேட்பாளரின்

## 4 வாகனங்கள் கைப்பற்றப்பட்டு சாரதிகளும் கைது

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

தேர்தல் சட்டங்களை மீறி, எஹலியகொட பிரதேச வீதிகளில் வாகனங்களில் பிரசார ஊர்வலம் சென்ற ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் ஒருவரின் நான்கு வாகனங்களை, நேற்று முன்தினம் (02) கைப்பற்றியுள்ள பொலிஸார், அவற்றின் சாரதிகளையும் கைதுசெய்துள்ளனர்.

எஹலியகொடை பிரதேசத்தின் நெதுரன பகுதி வீதியில் சென்றுகொண்டிருந்த மேற்படி 4 வாகனங்களின் நான்கு சாரதிகளே எஹலியகொடை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சேனக வீரசிங்கவுக்குக் கிடைத்த தொலைபேசி முறைப்பாடுகளையடுத்து, இவர்கள் எஹலியகொடை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

வேட்பாளர் உள்ளிட்ட மூவருக்கு மரண தண்டனை;

# மீள்பரிசீலனைக்கு மேன்முறையீடு

■ சிவாணி ஸ்ரீ

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன இரத்தினபுரி மாவட்ட வேட்பாளருமான பிரேமலால் ஜயசேகர, சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அருண நிலாந்த ஜயகொடி, காவத்தை பிரதேச சபையின் தலைவர் வஜிர தர்ஷன சில்வா ஆகிய மூவரும், இரத்தினபுரி மாவட்ட மேல்நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இம்மூவருக்கும் வழங்கப்பட்ட தீர்ப்புக் குறித்து, மீள்பரிசீலனை செய்வதற்கு மேல்முறையீட்டு மனு, சட்டத்தரணிகளால், நீதிமன்றத்தில் இன்று (03) தாக்கல் செய்யப்படவுள்ளதாக, சட்டத்தரணி டி.எம். ஜானக சுமேத தெரிவித்தார்.



இரத்தினபுரி முந்துவ பிரதேசத்தில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ரஞ்சித் பண்டாரவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், "பிரேமலால் ஜயசேகரவுக்கு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு இறுதித் தீர்ப்பு அல்ல. இந்தத் தீர்ப்புக்கு எதிராக நீதிமன்றம், மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ய முடியும்.

"நீதிமன்றத்தில் மீள் பரிசீலனை செய்வதற்காக மேல்முறையீட்டு மனுத் தாக்கல் செய்தபின், பிணை பெறுவதற்குப் பிணை விண்ணப்பப்படிவத்தை முன்வைப்பதற்கு சட்டத்தரணிகள் என்ற ரீதியில் நாம் நடவடிக்கை எடுப்போம்" என்றார்.



மட்டக்களப்பில்

## தேர்தல் சட்டவிதிகள் மீறல்; 269 முறைப்பாடுகள்

■ க.விஜயரெத்தினம், ஏ.எச்.ஏ. ஹுஸைன், ரீ.எல். ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் சட்டவிதிகளை மீறியமை தொடர்பாக, நேற்று (03) காலை வரை 269 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என, மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் சட்டவிதிகளை மீறிச் செயற்பட்டமை தொடர்பாக, தேர்தல் வன்முறைகள் தொடர்பாக மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்கும் அலுவலகத்துக்கு இந்த 269 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இம்முறைப்பாடுகளில், தேர்தல் சட்டவிதி மீறல் தொடர்பாக 257 முறைப்பாடுகளும், தேர்தல் வன்செயல்கள் தொடர்பில் 12 முறைப்பாடுகளும் இனங்காணப்பட்டுள்ளன.

இவற்றில் 172 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, முடிவுறுத்தப்பட்டுள்ளன எனவும், ஏனைய 97 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்டச் செயலாளருமான கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

## டெங்கு அபாயம்



நாட்டில் நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக, டெங்கு நோய் அபாயம் ஏற்பட்டுள்ளதாக, தேசிய டெங்கு நோய் தடுப்புப் பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் அருண தெரிவித்தார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, இரத்தினபுரி, கேகாலை, கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே, டெங்கு நோய் பரவும் அபாயமுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வருடத்தில், இதுவரையிலான காலப்பகுதியில் 23 ஆயிரத்து 934 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.



## கிருமிநாசினி தெளிப்பு...

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக, நாளை (05) நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைமுன்னிட்டு, ஹட்டன் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு கிருமிநாசினி தெளிக்கும் நடவடிக்கை, பொதுச் சுகாதார பரிசோதகர்களால், நேற்று (03) முன்னெடுக்கப்பட்டது.

வாக்களிக்கச் செல்லுகின்ற வாக்காளர்களின் நலன் கருதி, கிருமிநாசினி தெழிக்கப்பட்டதாக, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்ததோடு, வாக்களிக்கச் செல்லவுள்ள மக்கள், சுகாதார நடைபெறமுறையை பின்பற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர்.

(படப்பிடிப்பு - எஸ் சதீஸ்)

## நுவரெலியா மாவட்டத்தில் 181 தேர்தல் முறைப்பாடுகள்




■ ஆ.ரமேஸ்

நுவரெலியா தேர்தல் தொகுதிகளான நுவரெலியா - மஸ்கெலியா, கொத்மலை, ஹங்குராங்கெத்த, வலப்பனை ஆகியவற்றில், நேற்று முன்தினம் நள்ளிரவுவரை, 181 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று, மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்டச் செயலாளருமான எம்.பி.ஆர். புஷ்பகுமார தெரிவித்தார்.

இம்முறைப்பாடுகளில் இரண்டு முறைப்பாடுகள், கட்சிகளுக்கிடையிலான மோதல் தொடர்பில் பதிவாகியுள்ளன எனத் தெரிவித்த அவர், நாடாளுமன்றத் தேர்தலையொட்டி நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை எந்தவொரு தேர்தல் வன்முறைகளும் பதிவாகவில்லை எனவும் தெரிவித்தார்.

அதேநேரத்தில், நுவரெலியா மாவட்டச் செயலகத்தின் முதலாம் மாடியில் தேர்தல் கண்காணிப்பு முறைப்பாட்டுப் பகுதி காரியாலயம், 24 மணிநேரமும் இயங்கிவருவதாகத் தெரிவித்த அவர், தேர்தல் சட்டவிதிகளை மீறுவது, தேர்தல் வன்முறைகள் என, தேர்தல் விதிகளுக்கு அப்பாற்பட்ட முறைப்பாடுகளைத் தயக்கமின்றிப் பொதுமக்களும் முன்வைக்க முடியுமென்று அவர் தெரிவித்தார்.

## சீரற்ற வானிலைக்கு மத்தியில் தேர்தல் பணிகள் முன்னெடுப்பு



■ ஆ.ரமேஸ்

நுவரெலியா மாவட்டத்தில் நீடித்துவரும் சீரற்ற வானிலை காரணமாக, மக்களின் இயல்புவாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடும் மழைக்கு மத்தியிலும் நாளை (5) நடைபெறவுள்ள தேர்தலுக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நுவரெலியா மாவட்டத்தில் காணப்படும் நான்கு தேர்தல் தொகுதிகளுக்கான வாக்களிப்பு நிலையங்களுக்கு, வாக்குப் பெட்டிகளை நுவரெலியா நகர மண்டபத்திலிருந்து கொண்டுசெல்ல, நுவரெலியா தேர்தல் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

அதற்கான வாகனங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று, அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால்

# திருமலை மாவட்டத்தில் 35 ஏக்கர் காணிகள் வழங்கல்

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால், 35 ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகமும், தலைவருமான திஸார ஜெயசிங்கவால், உத்தியோகபூர்வமாக நேற்று (03) வழங்கப்பட்டன.



குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கும்புறுப்பிட்டி பகுதியில் 1984ஆம் ஆண்டு இளைஞர் சேவைகள் மன்றத்துக்குச் சொந்தமான காணிகள், சுமார் 40 வருடங்களுக்கு மேலாக தனியாருக்குச் சொந்தமாக்கப்பட்டு, கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும் அவற்றைத் திருகோணமலை மாவட்டத்திலுள்ள இளைஞர்களின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக 35 ஏக்கர் காணிகளைப் பெற்றுக்கொடுத்துள்ளதாகவும் திஸார ஜெயசிங்க தெரிவித்தார்.

இக்காணிகளினூடாக சுற்றுலாத்துறை, விவசாயத் துறையை மேம்படுத்துவதுடன், சர்வதேச இளைஞர் அபிவிருத்தி வலயமொன்றை உருவாக்க உள்ளதாகவும் இதனூடாகப் பாரிய அபிவிருத்தித் திட்டங்களைத் தூர நோக்காகக் கொண்டு ஏற்படுத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தேசிய மாற்றத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திஸார ஜெயசிங்க, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் சிசிர குமார, வடக்கு மாகாணப் பணிப்பாளர் சந்திரபால, நிர்வாகத்துறைப் பணிப்பாளர் சமல் மனுல, திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

காத்தான்குடியில் 30ஆவது வருட

# சுஹதாக்கள் ஞாபகார்த்தம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு, காத்தான்குடியில் 30ஆவது வருடமாக சுஹதாக்கள் ஞாபகார்த்த தின நிகழ்வுகள், காத்தான்குடியில் நேற்று (03) நடைபெற்றன.

காத்தான்குடியில் இரு பள்ளிவாசல்களில் தொழுகையில் ஈடுபட்டிருந்த 103 முஸ்லிம்கள், 03.8.1990 அன்று விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டு, நேற்றுடன் 30 வருடங்களாகின.

இதனையொட்டி, இந்தப் பள்ளிவாசல் படுகொலைகள் இடம்பெற்ற காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா ஜும்ஆ பள்ளிவாசலிலும் காத்தான்குடி முதலாம் குறிச்சி ஹுஸைனிய்யா பள்ளிவாசலிலும் சுஹதாக்களின் நினைவாக, நேற்றுக் காலை புனித அல்குர்ஆன் ஓதப்பட்டு, பிராத்தனை நடைபெற்றது.



இந்த நிகழ்வுகளில், பள்ளிவாசல்களின் தலைவர்கள், இமாம்கள், நிர்வாகிகள், ஜமாஅத்தார்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, பள்ளிவாசல் படுகொலையில் உயிரிழந்த 103 பேரின் ஜனாசாக்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள சுஹதாக்கள் மய்யவாடியின் சுற்று மதிலுக்கு வர்ணம் தீட்டும் நடவடிக்கை, மீரா ஜும்ஆப்பள்ளிவாசல் நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டது.





கதரகம 2020

வரலாற்று புகழ்மிக்க ருஹுணு மஹா கதிர்காம தேவாலயத்தின் எஸல மஹா பெரஹெர உற்சவம் - 2020

தீமைகள் அகன்றொழிந்து - வையகம் வளம் பெற
உன் அருள் போற்றும் அடியாருக்கு - ஆசி வளங்கிடுவாய்

நீர்வெட்டுத் திருவிழா ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி இடம்பெறும்

கருணைமிகு கந்தனின் அருள் பெற வீட்டிலிருந்து தேசிய தொலைக்காட்சி மற்றும் தேசிய வானொலி ஊடாக இரத பவனி உற்சவத்தில் பக்தியோடு பங்கெடுக்க ருஹுணு மஹா கதிர்காம தேவாலயத்தின் (செயலிலுள்ள) பஸ்நாயக்க நிலமே தில்ருவன் ராஜபக்ஷ உங்களையும் அழைக்கின்றார்.

நிகழ்விற்கான அனுசரணையாளர் PEOPLE'S BANK The Bank of the People · Sri Lanka Telecom Mobitel · SLIC · NLB NATIONAL LOTTERIES · Anchor · SRI LANKA · NSB · BOC · LITRO GAS

ஊடக அனுசரணை · city · தமிழ்Mirror · தொழில்நுட்ப ஒத்துழைப்பு e-wis · நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு MGH associates

உன் கருணையால் உலகம் அழகாகுமே

# வாக்களிப்பதைத் தவறவிட வேண்டாம்...

வாக்கு என்பது நம் அனைவரதும் உரிமை. அந்த உரிமையைச் சரியாகப் பயன்படுத்தத் தவறினால், அதன் விளைவுகளையும் வாக்காளர்களே சுமக்க வேண்டும். ஜனநாயக நாட்டின் மிகப் பெரிய உரிமையாகக் கருதப்படும் வாக்குரிமையைத் தவறிவிட்டுவிட்டு, 'தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர்கள் எதையும் செய்யவில்லை', 'எங்கள் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவில்லை' என் மாரடித்துக்கொள்வதில் பிரயோசனமில்லை. ஆகையால், வாக்கு என்றும் பலமான ஜனநாயக ஆயுதத்தை, ஒவ்வொரு குடிமகனும் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதேவேளை, தேர்தல் சட்டதிட்டங்களை அனைத்து வேட்பாளர்களும் உரியமுறையில் கடைப்பிடிக்க வேண்டும். மக்களின் மனதை வென்று தமக்கான வாக்குகளைப் பெறவேண்டுமே தவிர, எதைச் செய்தாவது வெற்றிபெறவேண்டும் எனநினைப்பது முட்டாள்தனம். ஆகையினால்தான், "தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் வேட்பாளர்கள் நீதிமன்றம் மூலம் குற்றவாளியாக நிருபிக்கப்பட்டால், அவருக்கு வழங்கப்படும் தண்டனைகளுக்கு மேலதிகமாக 7 வருடங்களுக்கு அரசியல்தடை விதிக்க வேண்டும்" என, தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், அழுத்திச் சொல்லியிருக்கிறார். எனவே, சட்டதிட்டங்களை மீறி, எந்தச் செயலையும் செய்யத் துணிய வேண்டாம்.

இதேவேளை, நாம் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பது பற்றியும் வாக்காளர்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் வாக்களிப்பது எவ்வளவு முக்கியமோ, அதேயளவு தம் வாக்குகள் செல்லுபடியானவையாக இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதும் முக்கியமானது. வாக்களிப்பது பற்றிய தெளிவின்றி வாக்களிப்பதனூடாக அவ்வாக்குகள் செல்லா வாக்குகளாகப் பதிவாகக்கூடும். இதனூடாக, நீங்கள் எதிர்பார்த்த வேட்பாளர் வெற்றிபெறாமலும் போகக்கூடும்.

தேர்தல் ஆணைக்குழுவால் வாக்களிப்புக்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில் ஒரு வாக்காளர், தனக்குப் பிடித்த ஒரு கட்சிக்கும், அக்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று வேட்பாளர்களுக்கான விருப்பு வாக்குகளையும் பதிவுசெய்ய முடியும். இத்தகைய தெளிவுடன் உங்கள் வாக்குகளைப் பதிவுசெய்தால் அது முழுமையானதாக இருக்கும். இவைதவிர, ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளுக்குப் புள்ளடியிடுவதும், மூன்றுக்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளைப் பதிவுசெய்வதும் செல்லுபடியற்ற வாக்குகளாகவே கருதப்படும்.

ஆகையால், உங்களுக்கான வாக்குரிமையை ஒவ்வொருவரும் முழுமையாகப் பயன்படுத்த முன்வரவேண்டும். உரிய ஆவணங்களைத் தன்வசம் வைத்திருப்பதுடன், சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி, அனைத்து மக்களும் தங்களின் வாக்குரிமை என்றும் ஜனநாயக உரிமையை முழுமையாகப் பயன்படுத்தத் தவறவேண்டாம்.

தமிழ்Mirror
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk

## தமிழ்மிரருக்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம். அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு அறியத்தரலாம். மேலும், உங்கள் பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கலாம். அவை உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
இலக்கம் 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011-2479372-6
தொலைநகல் – 0112304114
மின்னஞ்சல் – tamilmirror@wijeya.lk




# தலைவிதி: எழுதுவதற்கான கையேடு

**முகம்மது தம்பி மரைக்கார்**

கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல், இரண்டு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், நாளைய தினம் நடைபெறவுள்ளது. 196 பேரைத் தெரிவு செய்வதற்கான இந்தத் தேர்தலில், 7,452 பேர் போட்டியிடுகின்றனர். இவர்களில் 3,652 பேர், அரசியல் கட்சிகள் சார்பிலும் 3,800 வேட்பாளர்கள் சுயேச்சைக் குழுக்களிலும் போட்டியிடுகின்றனர். .

நாடாளுமன்றத் தேர்தலில் ஒருவரைத் தெரிவு செய்வதென்பது, மிகவும் முக்கியமான செயற்பாடாகும். அடுத்து வரும் ஐந்து வருடங்களுக்கான அரசியல் தலைவிதியை, இந்தத் தெரிவுதான் தீர்மானிக்கப் போகின்றது.

எனவே, தமது தெரிவு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை, வாக்காளர்கள் புரிந்து செயற்பட வேண்டியமை அவசியமாகும்.

### தெரிவு

தேர்தலில் யாரைத் தெரிவு செய்வது என்பதை, ஆகக் குறைந்தது இரண்டு வகைப்படுத்த முடியும்.

1. விருப்பமானவர்களைத் தெரிவு செய்தல்
2. பொருத்தமானவர், தகுதியானவர்களைத் தெரிவு செய்தல்

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர், நமக்கு விருப்பமானவராக இருந்தாலும், அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கான தகுதிகள் அற்றவராக இருக்கக் கூடும். எனவே, தகுதியானவர்களைத் தெரிவு செய்தல் என்பது, வாக்காளர்களுக்கான மிகப்பெரும் பொறுப்பாகும்.

அப்படியென்றால், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு, இருக்க வேண்டிய தகுதிகள் என்ன என்கிற கேள்வி முக்கியமானது. இது குறித்து, சிவில் அமைப்புகள் வாக்காளர்களைத் தெளிவுபடுத்தி வருகின்றன. அதேவேளை, வாக்காளர்களும் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் போது, சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

வன்முறையற்றவர், இனங்களுக்கிடையிலும் சமயங்களுக்கிடையிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர் ஆகியோருக்கு வாக்களிக்குமாறு, சிவில் அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றமையை நாம் காணக்கூடியதாக உள்ளது.

இனவாதம் பேசி, சமூகங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தி, அதனூடாக மக்களைச் சூடேற்றி வாக்குகளைச் சேகரிக்கலாம் என நம்பி, செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேட்பாளர்களை, மக்கள் புறக்கணிக்க வேண்டும்.

போதைப்பொருள் பாவனை, போதைப்பொருள் வர்த்தகங்களுடன் தொடர்புடையவர்கள் வேட்பாளர்களாக இருப்பார்களாயின், அவர்களையும் மக்கள் நிராகரிக்க வேண்டும். வாக்குகளைப் பெறுவதற்காக, மதுபானம் வழங்கும் வேட்பாளர்களையும் போதைப்பொருளுடன் தொடர்புபட்டவர்களாகவே பார்க்க வேண்டியுள்ளது.

நாடாளுமன்றத்துக்கு மக்கள் யாரைத் தெரிவு செய்கின்றார்களோ, அவர்தான் குறித்த மக்களின் அரசியல் பிரதிநிதியாக இருக்கப் போகின்றார். அவரை வைத்துத்தான், அவருக்கு வாக்களித்தவர்கள் மதிப்பிடப்படுவார்கள் என்பதை, எப்போதும் வாக்காளர்கள் நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

நமது நாடாளுமன்றப் பிரதிநிதிகளாக, படித்தவர்கள், பண்பாளர்கள் இருப்பது குறித்து, நாம் பெருமைப்பட முடியும் என்பதையும் மறந்து விடக்கூடாது. ஆனாலும், தேர்தலில் யாரைத் தெரிவு செய்வது என்பது, வாக்காளர்களுக்குச் சவாலான விடயம்தான் என்பதையும் மறுப்பதற்கில்லை.

### புரிதல்

மக்களில் அதிகமானோர், அரசியலைக் கட்சி சார்ந்துதான் புரிந்து வைத்திருக்கின்றனர். அதனால், தேர்தல்களில் தமக்குப் பிடித்த கட்சியைத் தாண்டி, வேட்பாளர்களுக்கு வாக்குகளை வழங்குவதற்குப் பெரும்பாலானோர் தயாராக இல்லை என்பதுதான், கசப்பான உண்மையாகும்.

எனவே, தமக்கு விருப்பமான கட்சி நிறுத்தும் வேட்பாளர்களில் இருந்தே, தமது தெரிவை அநேகமானோர் மேற்கொள்கின்றனர்.

இந்தத் தேர்தலில், சில வேட்பாளர்கள் பெரும் தொகையான பணத்தைச் செலவிடுகின்றமையைக் காண்கிறோம். தமது பிரசார நடவடிக்கைகளுக்காகவும் விளம்பரங்களுக்காகவும் அதிக பணத்தைச் செலவிடும் இவர்கள், வாக்காளர்களுக்கும் பணத்தைப் பகிர்ந்தளிக்கின்றனர். இவ்வாறான வேட்பாளர்கள் குறித்தும், வாக்காளர்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியொன்றைப் பெறுவதற்காக, தேர்தல் காலத்தில் பல மில்லியன் ரூபாய்களைச் செலவு செய்யும் இவ்வாறானவர்கள், தேர்தலில் வெற்றியீட்டினால், தாம் செலவிட்ட பணத்தை, தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பயன்படுத்தி, சட்டவிரோதமாக மீளவும் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியம் உள்ளது என்பதையும் மக்கள் மறந்து விடக் கூடாது.

மறுபுறமாக, நாடாளுமன்றத் தேர்தலொன்றில், பல மில்லியன் ரூபாய்களை ஒருவர் செலவு செய்கின்றார் என்றால், அவருக்கு அந்தப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது என்பது தொடர்பிலும், மக்கள் கவனம் செலுத்த வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு முன்பாகத் தனது சொத்து விவரங்களை அறிவிப்பது, ஒவ்வொரு வேட்பாளரினதும் பொறுப்பாகும் என, 'ட்ரான்ஸ்பேரன்ஸி ஸ்ரீ லங்கா' அமைப்பு கூறுகிறது. ஆனால், இந்தத் தேர்தலில் போட்டியிடும் 7,452 வேட்பாளர்களில் சிலர் மட்டுமே அறிவித்துள்ளார்கள்.

### அக்கறையின்மை

ஆனால், மக்களில் பெரும்பாலானோர், இந்த விடயங்களிலெல்லாம் அக்கறை காட்டுவதில்லை. தகுதியானவர்களுக்கு வாக்களிப்பதை விடவும், விருப்பமானவர்களுக்கு வாக்குகளை வழங்குவதற்கே மக்களில் அதிகமானோர் விரும்புகின்றார்கள். இதன் காரணமாக, 'தகுதி'யானவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதற்குப் பின்வாங்குகின்றமையையும் கண்டு வருகின்றோம்.

சிலவேளைகளில், 'தகுதியான வேட்பாளர்களாக இருப்பார்கள்' என, நாம் நம்புகின்றவர்கள் கூட, விருப்புவாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் போட்டியின் போது, ஜனநாயக விரோதிகளாகவும் வன்முறையாளர்களாகவும் நடந்து கொள்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

தமது பிரதேசத்துக்குள், தங்கள் கட்சியில் போட்டியிடும் சக வேட்பாளர்கள் வந்து, வாக்காளர்களைச் சந்திப்பதற்கே, சில வேட்பாளர்கள் அனுமதி மறுத்தமையையும் இந்தக் காலத்தில் நாம் கண்டோம். வேறு சில வேட்பாளர்கள், கூட்டுச் சேர்ந்து கொண்டு, தமக்கிடையில் மட்டும் விருப்பு வாக்குகளைப் பகிர்ந்து கொள்வதெனத் தீர்மானித்து உள்ளமையையும் அறிய முடிகிறது. இந்தச் செயற்பாடுகள், ஜனநாயக விரோதமானவையாகும்.

அம்பாறை மாவட்டத்தில், 'முக்கிய' சின்னத்தில் போட்டியிடும் ஒரு கட்சியின் வேட்பாளர்கள், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமையை அறிந்து கொண்ட அந்தக் கட்சியின் தலைவர், இது குறித்துத் தனது கண்டனங்களைத் தேர்தல் பிரசார மேடைகளிலேயே தெரிவித்தார். "விருப்பு வாக்குகளுக்காக, இவ்வாறு செயற்படும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டாம்" என்று, பகிரங்கமாகவே அத்தலைவர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கவனிக்க வேண்டிய கல்வித் தகைமை

இலங்கையில் தேர்தல் ஒன்றில் போட்டியிடுவதற்கு, வாக்காளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய, குறைந்தபட்ச கல்வித் தகைமை குறித்து, எவ்விதமான சட்டதிட்டங்களும் கிடையாது. அதனால்தான், க.பொ.த. சாதாரண தரம் சித்தியடையாத 94 பேர், கடந்த நாடாளுமன்றில் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

நாடாளுமன்றம் என்பது, சட்டவாக்க சபையாகும். அங்குதான், சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. சட்டங்களை உருவாக்கும் ஒரு சபையிலுள்ள, 225 உறுப்பினர்களில் 94 பேர், க.பொ.த. சாதாரண தரத்தில் கூடச் சித்தியடையாதவர்களாக இருந்துள்ளனர் என்பது, அதிர்ச்சிகரமான தகவலாகும். சிற்றூழியராக அரச தொழிலொன்றைப் பெற்றுக் கொள்வதென்றால் கூட, கல்வித் தகைமையாக க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்பதை, இங்கு நினைவுபடுத்துதல் பொருத்தமாக அமையும்.

ஆகவே, அரசியல் கட்சிகள் மீதான விருப்பு வெறுப்பு, தனி மனிதர்கள் மீதான ஈடுபாடு போன்றவற்றுக்கு அப்பால் நின்று, 'இந்தத் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும்' என்பதை, வாக்காளர்கள் தீர்மானிக்க வேண்டும். அதுதான் சரியானதொரு தெரிவாக இருப்பதற்கான அதிக சாத்தியங்கள் உள்ளதொரு தீர்மானமாக அமையும்.


### கவனிக்க வேண்டியவை

முன்னைய நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்களில், மிக அதிகமானோர் இந்தத் தேர்தலிலும் போட்டியிடுகின்றார்கள். ஆனால், கடந்த முறை நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தார்கள் என்பதற்காக மட்டும், அவர்களுக்கு வாக்களித்து விட முடியுமா?

கடந்த ஆட்சிக் காலத்தில், 414 நாள்கள் நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெற்றிருந்தன. அவற்றில், 20 நாள்கள் மட்டுமே நாடாளுமன்றத்துக்குச் சென்ற உறுப்பினர்களும் இருக்கின்றனர். அவ்வாறானவர்களும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர் என்பதையும் வாக்காளர்கள் மனதில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

நாடாளுமன்றம் என்பது, மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பேசுவதற்கும், அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்குமான ஓர் உயர் சபையாகும். ஆனால், கடந்த காலங்களில், நாடாளுமன்றில் உரையாற்றாத, ஒன்றிரண்டு தடவை மாத்திரமே உரையாற்றிய உறுப்பினர்களும் இருந்துள்ளனர். இவ்வாறானவர்களைத் தெரிவு செய்வதால், ஒரு சமூகம் என்ன பலனை அடைந்து கொள்ள முடியும்? ஆகவே, நாளை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், எவ்வாறான வேட்பாளர்களுக்கு வாக்களிக்கலாம் என்பதையும் எப்படியானவர்களை நிராகரிக்க வேண்டும் என்பதையும் வாக்காளர்கள் புரிந்து, தெளிந்து செயற்படுதல் அவசியமாகும்.

நாறிப் போய்க்கிடக்கும் 'சாக்கடை' அரசியலைச் சுத்தப்படுத்தும் தொழிலாளர்களாக, நாளைய தேர்தல் தினத்தில் நாம் செயற்பட வேண்டும். நமது தெரிவுகளும் வாக்களிப்பும் அற்கமைவானதாக இருக்க வேண்டும் என்பதே, நமது அவாவாகும்.



## வாழ்வியல் தரிசனம்

கடவுள் சகல உயிர்களையும் ஏதோ ஒரு காரணத்துக்காகவே படைத்திருக்கிறார். காரணம் இன்றி, எதுவும் நடப்பதில்லை. பிறப்பின் சூட்சுமம் அகன்றது.

இப்படி இருக்க, வாழ்க்கைத் தத்துவங்களை மாறுபாடாகக் கருதுவது தவறானது. வாழ்க்கையே பொய், வாழ்வது மாயம் எனச் சொல்லி, எதையும் செய்யாமல் இருக்க முடியாது. வாழும் காலத்தையும் நிலையாமையையும் இணைத்தலாகாது.

காலத்தின் யதார்த்தங்களை உணருங்கள். நாங்கள் வாழ்ந்த வாழ்க்கை உண்மையானதுதான். வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்தவை பொய் என்றால், நடைபெற்ற சம்பவங்கள்தான் என்ன? வரட்டு வேதாந்தம் தப்பிக்கும் உபாயமல்ல!

நல்லவை செய்தால் அது, உலகுக்கு உவகையூட்டுகின்றது. அனுபவங்களை நாம் பெற்ற வண்ணமே இருக்கின்றோம். பூமியில் வாழ்ந்த பெரியோர்கள் உண்மையை மட்டுமே சொல்லியுள்ளார்கள். வாழ்ந்த நாள்களின் ஒவ்வொரு வினாடிகளுமே உண்மையானவை. வாழும் காலத்தைப் பயனுறச் செய்வதே சிறப்பு.

பொய்யான வாழ்வில், ஏது பயன் எனச் சொல்லல் ஆகாது. இறப்பும் பிறப்பும் பொய்யாகாது. நிலையாமை என்பது வேறானது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### உடைந்துவிழும் நிலையில் வீடுகள்

மடுப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, அமைதிபுரம் பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் அமைக்கப்பட்ட 47 வீட்டுத்திட்டத்தில் உள்ள வீடுகள், உடைந்துவிழும் நிலையில் காணப்படுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

பெரியபண்டிவிரிச்சான் கிழக்கு, பெரியபண்டிவிரிச்சான் மேற்கு, சின்னப்பண்டிவிரிச்சான் ஆகிய கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்ஆகியோருக்கு என, 'பெரிய பண்டிவிரிச்சான் 47 வீட்டுத்திட்டம்' என்ற கிராமம் அமைக்கப்பட்டு, 2013ஆம் ஆண்டு மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இவ்வாறு கையளிக்கப்பட்ட வீடுகளில், மக்கள் குடியேறி சில நாள்களிலேயே கதவுகளின் பூட்டுகள் கையோடு கழன்று வந்ததாகவும், சில மாதங்களில் சுவர்களில் வெடிப்புகள் தோன்றியதாகவும் தற்போது கூரைமரங்கள் உக்கிப்போய் உள்ளதால், சிறிய மழைபெய்யும் போதெல்லாம் மரங்களும் ஓடுகளும் உடைந்து விழுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

நோயாளர்கள், முதியோர், குழந்தைகள் வசித்துவரும் வீடுகளில், இவ்வாறு கூரைகளின் பகுதிகள் உடைந்து விழுவதால், எப்போது தங்களின் தலைக்குமேல், கூரை இடிந்துவிழும் என்ற பயத்தில் வீட்டில் வசிக்க வேண்டிய அச்ச நிலைமையில் உள்ளதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

எனவே, உயிராபத்துகள் நிறைந்த இத்தகைய அபாயநிலை குறித்து, அதிகாரிகள் நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

–ஆர். ஜெயகௌரி

# அழைப்பு எடுப்பதாகக் கூறி அலைபேசி திருட்டு

எச்.எம்.எம்.பர்ஸான்

வீதியால் சென்ற நபரொருவர், அவசரமாக அழைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு அலைபேசியைத் தாருங்கள் என்று பாசாங்கு செய்து, அந்த அலைபேசியைத் திருடிச் சென்ற சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆலங்குளம் பகுதியைச் சேர்ந்த நபரொருவர், வீதியில் அவருடைய நண்பரிடம் பேசிக் கொண்டு நின்ற போது, அவ்வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த நபரே, அழைப்பு ஒன்றை எடுப்பதற்கு அலைபேசியைக் கேட்டுள்ளார்.

உதவி எனும் நோக்கில், மேற்படி நபர், அலைபேசியைக் கொடுக்க, மோட்டார் சைக்கிளில் வந்த நபர், அதை எடுத்துத் தப்பிச் சென்றுள்ளார்.

அலைபேசியைப் பறிகொடுத்த நபர், இந்த நூதனத் திருடனை அடையாளம் காணுமாறு, வாழைச்சேனை பொலிஸாரின் உதவியை நாடியுள்ளார்.

# அனுமதியுடனேயே தேர்தல் முடிவுகளை அறிவிக்கலாம்

கொடுப்பனவைச் செலுத்தி, பதிவு செய்து கொண்டுள்ள இலத்திரனியல் ஊடகங்கள் மாத்திரமே 2020 நாடாளுமன்றத் தேர்தலின் உத்தியோகபூர்வ முடிவுகளை அறிவிப்பதற்கான அனுமதியை, தேர்தல் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

கடந்த தேர்தல்களின் போது சில ஊடக நிறுவங்களின் பிராந்திய முகவர்களால் உத்தியோகபூர்வமற்ற முறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட தேர்தல் முடிவுகளை வெளியிட்டமையால், தேர்தல் முடிவுகள் மீதான மக்களின் நம்பகத்தன்மை முறிவடைந்ததை அவதானிக்க முடிந்ததாக், தேர்தல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.



# வவுனியாவில் அடிக்கல் நாட்டல்

க.அகரன்

பகல் நேரப் பராமரிப்புடன் கூடிய முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, வவுனியா வெளிவட்ட வீதியில் அமைந்துள்ள குடிவரவு திணைக்களத்துக்கு அருகாமையில், நேற்று (03) நடைபெற்றது.

இதன்போது வவுனியா மாவட்டச் செயலாளர் சமன்பந்துலசேன , பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

இந்தக் கட்டடம், மகளிர், சிறுவர் விவகார அமைச்சின், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ், 8 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலும் வவுனியா மாவட்டச் செயலகத்தின் பங்களிப்புடனும் நிர்மாணிக்கப்படவுள்ளது.

5 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் இங்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

போதைப்பொருள் விவகாரம்:

# ஒருவருக்கு விளக்கமறியல்

எப்.முபாரக்

திருகோணமலை, சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 80 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளைத் தம்வசம் வைத்திருந்த நபரொருவரை, இம்மாதம் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க உத்தரவிட்டார்.

கண்டிவீதி, சீனக்குடா பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே, இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேகநபர், ஹெரோய்ன் போதைப்பொருளை விற்பனை செய்துவருவதாக, சீனக்குடா போதைப்பொருள் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், 80 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் (02) கைதுசெய்யப்பட்டார்.

மீண்டும் கொரோனா ஏற்படா வண்ணம்

# ‘கடமையில் ஈடுபடுங்கள்’

என்.ராஜ்

தேர்தல் விதிமுறை மீறல்களைத் தடுப்பதோடு, யாழில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படா வண்ணம் தேர்தல் கடமையில் ஈடுபடுமாறு, யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்ணான்டோ தெரிவித்தார்.

தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள பொலிஸாருக்கான தேர்தல் கடமை தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம், யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில், நேற்று முன்தினம் (02) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், இம்முறை தேர்தலில், இரண்டு விடயங்களைத் தாங்கள் கருத்திலெடுக்க வேண்டுமெனவும் அதாவது வாக்களிப்பு நிலையங்களில், தேர்தல் விதிமுறைகளை மீறுவோர் தொடர்பிலும் அதேபோல் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படாத வண்ணம் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் தம்மிடமுள்ளதென்றார்.



வாக்களிப்பு நிலையங்களில் கடமையில் உள்ள பொலிஸார், மூன்று விடயங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டுமெனத் தெரிவித்த அவர், அதாவது, வாக்காளர்கள் கட்டாயமாக முகக் கவசம் அணிந்து வர வேண்டுமெனவும் கைகள் கழுவி, வாக்களிப்பு நிலையத்துக்குள் செல்ல வேண்டுமெனவும் அத்துடன், சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டுமெனவும் கூறினார்.

எனவே, இம்முறை தேர்தலில், உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளைச் சரிவர நிறைவேற்ற வேண்டுமெனவும், பொலிஸாரை பிரசாத் பெர்ணான்டோ அறிவுறுத்தினார்.

# மாத்தளையும் தயார்

ரவீந்திரிவிராஜ் அபேசிறி



நாளை (5) நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்காக மாத்தளை மாவட்டம் தயார்படுத்த ப்பட்டுள்ளதாக, மாத்தளை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி, எஸ்.எம்.ஜி.கே. பெரேரா தெரிவித்தார்.

5 பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக, 407,569 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன், 326 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அங்கிகரிக்கப்பட்ட 13 கட்சிகள், சுயேச்சைக் கட்சிகளைச் சேர்ந்த, 184 பேர் களத்தில் குதித்துள்ளதுடன், 6,000 பொலிஸ், சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் 1,700 இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இளைஞர், யுவதிகளின்

# ‘முதல் வாய்ப்பு தவறக் கூடாது’

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், முதலாவது தடவையாக வாக்களிக்கும் தகுதியைப் பெற்றுள்ள இளைஞர், யுவதிகள், இந்த வாக்களிப்பை முதலாவது அனுபவமாக்கிக் கொள்வதில் தவறக் கூடாதென, தேர்தல்கள் உதவி ஆணையாளர் ரீ.ஹென்ஸ்மன் தெரிவித்தார்.

நாளைய தினம் (05) நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான முன்னாயத்தங்கள் சகலதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரணமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் விவரிக்கையில், ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற அதிகாரம் நாளைய தினம்



மக்களின் கைகளுக்குச் செல்கின்றது. இந்த அரிய வாய்ப்பை, மக்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

குறிப்பாக, இம்முறை முதன்முறையாக வாக்களிக்கும் தகைமை பெற்ற இளையோர், தயக்கமின்றி இந்தத் தேர்தலின் மூலம் தமது முதல் வாக்களிக்கும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளும் ஆர்வத்தைக் கொண்டிருக்க வேண்டுமெனவும் கூறினார்.

அத்துடன், இம்முறை கொரோனா வைரஸ் தடுப்பு முற்பாதுகாப்பு ஏற்பாடுகள் இருப்பதால், வாக்காளர் வாக்களிப்பு நிலையத்துக்குள் உள் நுழையும்போதும் வெளியேறும்போதும் கிருமித் தொற்று நீக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, வாக்காளர்கள் ஒவ்வொருவரும் கட்டாயம் முகக்கவசம் அணிந்து வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். கறுப்பு, நீல நிறக் குமிழ் முனைப் பேனா, ஆளடையாள அட்டை இவற்றைத் தவிர தேவையற்ற பொருள்களை வாக்களிப்பு நிலையத்துக்கு எடுத்து வர வேண்டாமெனவும் அவர் அறிவுறுத்தினார்.

# ‘சிவநாதன் கிசோருக்கு எதிராக நடவடிக்கை’

க.அகரன்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் செஞ்சிலுவை சங்கத்தின் வவுனியா கிளையின் முன்னாள் தலைவருமான சிவநாதன் கிசோர், அண்மையில் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துகள் உண்மைக்குப் புறம்பானவையெனத் தெரிவித்த செஞ்சிலுவை சங்கத்தின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான அன்டன் புனிதநாயகம், இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆராய்வதாகவும் கூறினார்.

வவுனியாவில், நேற்று முன்தினம் (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், 2009ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்களுக்காக, இலண்டனில் இருந்து கொண்டுவரப்பட்ட வணங்காமண் கப்பலில் இருந்த பொருள்கள், அன்று இருந்த நிர்வாகத்தினரால் விற்கப்பட்டதாகவும் இந்த நிர்வாகத்தினருக்குச் சொந்தமான வாகனங்கள் வாடகைக்குப் பெறப்பட்டு, 75 ஆயிரம் ரூபாய் பணம் சம்பாதிக்கப்பட்டதாவும், சிவநாதன் கிசோரால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றார்.

இந்தக் கருத்து அப்பட்டமான பொய்யெனத் தெரிவித்த அவர், இது தொடர்பான ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்தபோது, 2009ஆம் ஆண்டில், எந்தச் சந்தர்ப்பத்திலும் அன்றைய தலைவர் ப.சத்தியலிங்கம், செயலாளர் வில்வராஜா, பொருளாளர் தனபாலசிங்கம் ஆகியோரது பெயரில் எந்தவிதமான வாகனங்களும் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருக்கவில்லை எனவும் வெளியாரின் வாகனங்களே அமர்த்தப்பட்டிருக்கின்றன எனவும் கூறினார்.

> மானநட்ட வழக்குத் தொடர்வதற்கான கோரிக்கை கடிதம் விரைவில் அவருக்கு அனுப்பப்படும்

அத்துடன், வணங்காமண் கப்பலில் வந்த காலாவதியாகிய சில பொருள்கள், தமது களஞ்சியத்தில் தற்போதும் வைக்கப்பட்டுள்ளனவெனத் தெரிவித்த அன்டன் புனிதநாயகம், அதில் அவ்வாறான நடவடிக்கைகள் எவையும் இடம்பெறவில்லையெனவும் கூறினார்.

சிவநாதன் கிசோரின் இந்தக் கூற்றுக்கு எதிராக, மானநட்ட வழக்குத் தொடர்வதற்கான கோரிக்கை கடிதம் விரைவில் அவருக்கு அனுப்பப்படுமெனவும், அன்டன் புனிதநாயகம் என்றார்.

# ‘தமிழ்நாட்டில் இரு மொழி கொள்கை தொடரும்’

தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கையை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. இரு மொழிக் கொள்கையே தொடருமென, முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக, அவர் வெளியிட்ட அறிக்கையில், “80 ஆண்டு காலமாக, தமிழக மக்கள், இரு மொழிக் கொள்கையில் உறுதியாக உள்ளனர். இது தொடர்பாக, பல காலகட்டங்களில், தங்களது உணர்வைப் பல்வேறு போராட்டங்கள் மூலமாக வெளிப்படுத்தியுள்ளனர். இரு மொழிக் கொள்கையை வலியுறுத்தி, தமிழக சட்டசபையில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

“தமிழகத்தைப் பொறுத்தமட்டில், இரு மொழிக் கொள்கையைக் கடைபிடிப்போமென, 2019 ஜூனில் கடிதம் எழுதினேன். இரு மொழிக் கொள்கையை கடைப்பிடிப்போம் என, சட்டசபையில் நடந்த விவாதத்தின் போதும் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்துள்ளேன்.

“தற்போது, மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள புதிய கல்விக் கொள்கையில் மும்மொழிக் கொள்கை இடம்பெற்றிருந்தாலும், மும்மொழிக் கொள்கையை தமிழ்நாட்டில் எப்போதும் அனுமதிக்க மாட்டோம். தமிழகத்தின்ஒட்டு மொத்த உணர்வும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட பெரும்பாலான அரசியல் கட்சிகளும், இரு மொழிக் கொள்கையைப் பின்பற்றுவதையே கொள்கையாகக் கொண்டுள்ளனர். மத்திய அரசு அறிவித்த தனது புதிய கல்விக் கொள்கையில், மும்மொழிக் கொள்கை இடம்பெற்றிருப்பது வேதனையும் வருத்தத்தையும் அளிக்கிறது.ஒட்டுமொத்தத் தமிழக மக்களின் உணர்வை ஏற்று, மத்திய அரசு அறிவித்த மும்மொழிக் கொள்கையை மறுபரிசீலனை செய்து, அந்தந்த மாநிலங்கள் தங்களின் கொள்கைக்கு ஏற்ப செயற்படுத்திக்கொள்ள வேண்டும் என, பிரதமரை கேட்டுக்கொள்கிறேன்” எனவும், முதலமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடற்கரைப் பிரதேசத்தில்

# இராணுவத்தினர் சிரமதானப் பணி

ரீ.கே.றஹ்மத்துல்லா

சுற்றாடல் பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழ், அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச கடற்கரைப் பிரதேசங்களைச் சுத்தம் செய்யும் வேலைத்திட்டத்தை, பொத்துவில் செங்காமம் இராணுவத்தினர் வருடந்தோறும் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வேலைத்திட்டத்துக்கமைய, பொத்துவில் செங்காமம் பிரதேச இராணுவக் கட்டளைத் தளபதி லெப்டினன் ஏ.எம்.பி.கே. மெதகெதரவின் வழிகாட்டலின் கீழ், அசோக சமரசிங்க, அடம்ஸ் மோஸ், நிகோலா அலஸ் ஆகியோரின் நிதிப் பங்களிப்புடன், இராணுவத்தினர், உள்ளூர், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கலந்துகொண்டு பொத்துவில் விஸ்கி பொயிண்ட் கடற்கரைப் பிரதேசத்தில், நேற்று (03) சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கபுரியாகத் திகழும் பொத்துவில் பிரதேசத்தின் அறுகம்பை, உல்லை, கொட்டுக்கல், விஸ்கி பொயிண்ட், எலிபன்ட் பொயிண்ட் ஆகிய கடற்கரைப் பிரதேசங்கள், அம்பாறை மாவட்டத்தில் மிகவும்



> சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கபுரியாகத் திகழும் பொத்துவில் பிரதேசத்தின் அறுகம்பை, உல்லை, கொட்டுக்கல், விஸ்கி பொயிண்ட், எலிபன்ட் பொயிண்ட் ஆகிய கடற்கரைப் பிரதேசங்கள், அம்பாறை மாவட்டத்தில் மிகவும் பிரபல்யமவை

பிரபல்யம்மிக்க பிரதேசங்களாக உள்ளன.

கடற்கரைப் பிரதேசங்களில் காணப்படும் பிளாஸ்டிக், கண்ணாடிப் போத்தல்கள், பொலித்தீன் உள்ளிட்ட ஏனைய பொருள்களாலும் சுற்றாடலுக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டுவருவதுடன், அப்பிரதேசங்கள் அசுத்தமானலையாகவும் காட்சி அளிக்கின்றன.

எனவே, மிகவும் பிரபல்யம்மிக்க இப்பிராந்தியத்தைச் சுத்தப்படுத்தும் வேலைத்திட்டத்துடன், மக்களையும் விழிப்புணர்வூட்டும் பல்வேறுபட்ட நடவடிக்கைகளையும் அரச நிறுவனங்களும், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் பல்வேறுபட்ட முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உகந்தை மலையானின் ஆடிவேல் தீர்த்தோற்சவம் இன்று

சகா

வரலாற்றுப் பிரசித்திபெற்ற உகந்தை மலை முருகன் கோவிலின் வருடாந்த ஆடிவேல் விழா தீர்த்தோற்சவம், இன்று (04) காலை 09 மணியளவில் நடைபெறுமென்று, பிரதமகுரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் தெரிவித்தார்.

இன்று காலை 9.15 மணியளவில் திருவோணம் நிறைவுறுவதால், அதற்கு முன்னதாகத் தீர்த்தம் நடைபெறுமென்றும் பக்தர்கள் அதற்கேற்ப நேரகாலத்தோடு உரிய கிரியைகளுக்குச் சமூகமளிக்கவேண்டுமெனவும், அவர் கேட்டுக்கொண்டார்.



கோவில் வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க (சுதா) தலைமையில், கோவிலின் கிழக்கேயுள்ள வங்காள விரிகுடா சமுத்திரத்தில் வழமைபோன்று தீர்த்தம் நடைபெறவுள்ளது.

இந்தத் தீர்த்தோற்சவத்தில் பங்கேற்பதற்காக, நேற்றே சுமார் 1,000 பக்தர்கள் கோவிலில் தங்கியுள்ளனர். அவர்கள் மலையேறி ,நேர்த்தியையும் செலுத்தி வருகின்றனர்.

ஜூலை மாதம்21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான ஆடிவேல் விழா மஹோற்சவம், இன்றைய தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைகின்றது. கோவிலின் திருவிழா சிறப்புப் பூஜைகளை, பிரதம குருக்கள் சிவஸ்ரீ க.கு. சீதாராம் குருக்கள், உதவியாக சிவஸ்ரீ க.கு.சீ.கோவர்த்தன சர்மா ஆகியோர் நடத்துகின்றனர்.



மலையகத்தில் பொதுத் தேர்தல்:

# வரம் கொடுப்பாரா பூசாரி?


கவிதா சுப்ரமணியம்
gavitha.subramaniyam06@gmail.com

**தங்களை, தாங்களே ஆளத் தகுதி உள்ளவர்களின் கூட்டுணர்வையே, தேசியம் அல்லது ஜனநாயகம் என்று அழைக்கிறோம். தேசியம் என்பதற்குள், அனைத்து இன மக்களுக்குமான பொதுவான பிரதேசம், கலாசாரம், பொருளாதாரம், ஆகிய அனைத்தும் உள்ளடக்கப்படுகின்றன. இவை அனைத்தும் நாட்டிலுள்ள அனைத்து இனங்களின் அடையாளமாகும்.**

இந்த இனம் என்று வரும்போது, பொதுவாக மலையகத்தை எடுத்துக்கொண்டால், பெரும்பாலான தமிழர்கள், பெருந்தோட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் ஆகவும் அவர்களைச் சார்ந்தவர்களுமாகவே இருக்கின்றனர். 2012ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது, 4.5 சதவீதமான மக்கள், பெருந்தோட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர். அதேபோன்று, 2001ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, மலையகத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் 88 சதவீதமானோர், பெருந்தோட்டங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

கடுமையான பாகுபாட்டின் மத்தியில், குடியுரிமை, வாக்குரிமைக்காக நீண்ட நாள்களாக போராடிய இவர்கள், அதைப் பெற்றுக்கொண்டிருந்தாலும், ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் அடிமைகள் போல் நடத்தப்பட்டு, பின்னர் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த ஒடுக்குமுறைகளாலும், பெருந்தோட்டத் துறை மக்களின் வாழ்வு இலங்கையின் ஏனைய சமுதாயத்தினருடன் ஒப்பிட முடியாத அளவில் பின் தள்ளப்பட்ட வகையிலேயே இன்னும் உள்ளது என்பதே, நிதர்சன உண்மை.

'இந்தியத் தமிழர்கள்' அல்லது 'மலையகத் தமிழர்கள்' என்று அழைக்கப்படும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதார நிலைமை, உரிமைகள் ஆகியவற்றை வென்றெடுத்தல் எனும் அமைப்பாக, தொழிற்சங்கங்கள் செயற்பட்டு வந்தாலும், மலையகத்தின் ஆரம்பக்கட்ட அரசியலும் தொழிற்சங்கத்தின் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டது. அந்தவகையில், தொழிற்சங்க அரசியல், மலையக பெருந்தோட்டத்துறை மக்களின் ஒட்டுமொத்த தேசிய இன அரசியலின் ஒரு கூறாகக் கொள்ளலாம்.

இலங்கையில் முதல்முறையாக, தொழிற்சங்கம் பற்றிய அறிவை விதைத்தவர்களாக, அல்பிரட் ஏர்னெஸ்ட் பூல்ஜன்ஸ், கலாநிதி பின்டோ ஆகியோரே கருதப்படுகின்றனர். 1893ஆம் ஆண்டு கேவ்ஸ் அச்சு நிறுவன தொழிலாளர் போராட்டமும் 1896ஆம் ஆண்டு, புகையிரத ஊழியர்களின் வேலை நிறுத்தப் பேராட்டமும், 1906ஆம் ஆண்டு போக்குவரத்து துறைசார்ந்த ஊழியர்களின் வேலை நிறுத்த போராட்டம் என, தொடர்ச்சியான போராட்டங்களே, இலங்கையில் தொழிற்சங்க இயக்கத்துக்கு அத்திபாரமிட்டன.

இந்நிலையிலேயே, 1930களில், தோட்டப்புறங்களில் உள்ள தொழிலாளர்களை ஒன்றிணைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, அதன் பின்னர், மலையக மக்களின் அரசியலும் தொழிற்சங்க அரசியலோடே ஆரம்பமாகியது. மலையகத் தோட்டங்களுக்கு இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டு நூறு வருடங்களுக்கு பின்பே, தொழிற்சங்க அரசியல் பணிகள் மெதுவாக வேரூன்றுகிறது. இந்தத் தொழிற்சங்கத்தின் ஊடான அரசியலையே, பெருந்தோட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள், கடந்த 80 வருடங்களாக அனுபவித்து வருகின்றனர். இத்தனை வருடங்களாக மலையக மக்கள் சந்தித்த தேர்தலைப் போன்றே, இம்முறை நடைபெறும் பொதுத் தேர்தலும் அமையுமா அல்லது புதிய ஒரு யுகம் படைக்குமா என்பது, ஓகஸ்ட் 6ஆம் திகதிக்கு பின்னரே தெரியவரும்.

ஓகஸ்ட் 5ஆம் திகதி, அதாவது நாளை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில், நுவரெலியா மாவட்டத்திலுள்ள நுவரெலியா-மஸ்கெலியா, கொத்மலை, வலப்பனை, ஹங்குராங்கெத்த ஆகிய நான்கு தேர்தல் தொகுதிகளிலும் இருந்து 5 இலட்சத்து 717 ஆயிரம் பேர், வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் சுமார் 43 ஆயிரம் பேர் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் ஆவர். 8 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக, 12 அரசியல் கட்சிகள், 13 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 275 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். மலையகத்தில், இம்முறை அதிகளவான தமிழ் வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளமையால், வாக்குகள் சிதறடிக்கப்படும் அபாயம் காணப்படுகின்றது. இதனால், நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் குறைவடையக் கூடிய வாய்ப்பும் அதிகமாகவே காணப்படுகின்றது.

இந்த 80 வருடகால தொழிற்சங்க அரசியலில், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைத்த ஏமாற்றங்கள், நன்மைகள் தொடர்பாக சுருக்கமாகப் பார்த்தால், 1973ஆம் ஆண்டு, டிசெம்பர் 18ஆம் திகதி சம்பள உயர்வு கோரி, மலையக பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் சார்பில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பங்கேற்புடன் நடைபெற்ற போராட்டம், ஏதேனும் ஒரு காரணத்துக்காக இன்றுவரை தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. முதலாவதாக நடைபெற்ற இந்தப் போராட்டத்தின்போது, இலங்கை தோட்ட தொழிலாளர் யூனியன் தலைவர் என்.எம் பெரேரா, மாதாந்தச் சம்பளம் என்பது, அதிகபடியான கோரிக்கையாகும் என்றும் உலகத்தில் எந்தவொரு நாட்டிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்கப்படுவதில்லை என்றும் கூறி, எம் சமூகத்தின் நியாயமான கோரிக்கையை நிராகரித்திருந்தார். அத்தோடு, இந்த வேலைநிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட 10 நாள்களில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஒருதலைப்பட்சமாகப் போராட்டத்தில் இருந்து பின்வாங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

பின்னர் 1981ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் வரவு-செலவுத்திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு 70 ரூபாய் சம்பள உயர்வு வழங்கப்படும் என தீர்மானிக்கப்பட்ட போதும், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு இச்சம்பள உயர்வு மறுக்கப்பட்டது. இதன்போது, பெருந்தோட்ட தொழிலாளர்கள் அரசாங்கத்தால் திட்டமிட்ட முறையில் பாரபட்சமாக நடத்தப்பட்டனர். 1981ஆம் ஆண்டு பெருந்தோட்டங்களில் உள்ள 14 தொழிற்சங்கங்கள் ஒன்று கூடி, தமக்குள் பெருந்தோட்ட தொழிற்சங்கக் கூட்டுக்குழு என்ற அமைப்பை உருவாக்கி, 1981 ஓகஸ்ட் மாதம், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் 70 ரூபாய் சம்பள உயர்வு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்த ஒரு நாள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். எனினும் இந்த வேலைநிறுத்தத்தை எதிர்த்து, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து, 1989ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு 100 ரூபாய் சம்பள உயர்வு வழங்கப்படுவதற்கு அப்போதைய அரசாங்கத்தால் உறுதியளிக்கப்பட்டது. ஆனால், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஒரு ரூபாய் சம்பள உயர்வைக்கூட வழங்க அப்போதைய அரசாங்கம் எவ்விதமான ஏற்பாடுகளையும் செய்யவில்லை. அரசாங்கத்தில் அங்கம் வகித்த மலையக மக்களின் பிரதிநிதிகளும், இது தொடர்பாக அரசாங்கத்துக்கு அழுத்தங்களை தெரிவிக்கவில்லை.

> **மலையகத்தில் காணப்படும் தீர்க்கமுடியாத அல்லது தீர்க்க முடிந்தும் தீர்த்து வைக்கப்படாத பிரச்சினைகளை பட்டியலிட்டுக்கொண்டே போகலாம்**
>
> **நன்மை கிடைக்காமல் அடிமை வாழ்க்கை வாழ்ந்தாலும் தொழிற்சங்கத்தை விட்டுக்கொடுக்க மாட்டோம்" என்ற ஒரு தீர்க்கமான முடிவிலேயே 80 சதவீதமான தோட்டத் தொழிலாளர்கள் உள்ளனர்**
>
> **எது எவ்வாறாக இருந்தாலும், மலையக தேசியத்தை பாதுகாக்க வேண்டியது இன்றியமையாததாகும். அதற்கு மலையக தேசிய இன அரசியலை முன்நகர்த்த வேண்டியது கட்டாயமாகும்**



இவ்வாறான வரலாறுகளின் மத்தியில், 1998ஆம் ஆண்டு டிசெம்பர் 4ஆம் திகதி, முதலாவது கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதைத் தொடர்ந்து இன்று வரை 2 வருடங்களுக்கு ஒருமுறை பெருந்தோட்ட தொழிற்சங்கங்களுக்கும் பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையில், சம்பளக் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு வருகின்றது. எத்தகைய காட்டிக்கொடுப்புகள், துரோகங்களுள் இழைக்கப்பட்டாலும், பெருந்தோட்டத் துறையினரின் வாழ்வியலும் தொழிற்சங்க அரசியலும், பின்னிப் பிணைந்ததாகவே பிரிக்கமுடியாததாகக் காணப்படுகின்றது.

தற்போது பெருந்தோட்டப் பகுதிகளில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், செங்கொடிச் சங்கம் என்பவற்றின் ஆதிக்கமே அதிகமாக உள்ளது. எவ்வாறாக இருந்தாலும், வாக்குரிமையைப் பெற்ற மலையகத் தமிழர்கள், இன்னும் நில உரிமைக்காகப் போராடிக்கொண்டே இருக்கின்றனர். ஆரம்பத்தில், மக்கள் நலனுக்காகச் செயற்பட்ட தொழிற்சங்கங்கள், பின்னர் சுயநல அரசிலுக்காக செயற்படத் தொடங்கின. தொழிற்சங்கங்களுக்கு தொழிலாளர்கள் சந்தாப் பணம் செலுத்தினாலும், அம்மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் அவை பின் நிற்கின்றன.

குறிப்பாக வீட்டுரிமை, காணியுரிமை, கல்வியுரிமை, பாதுகாப்புரிமை தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் மத்தியில் வாழும் இவர்களின் நலன்களை மேம்படுத்தும் செயற்பாடுகளை, மலையக வரலாற்றில் எந்தவோர் அரசாங்கமும் மேற்கொண்டிருக்கவில்லை. அவ்வாறு கொண்டுவந்திருந்தாலும் அது முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை என்றே கூறவேண்டும்.

இது இவ்வாறிருக்க, சிறுத்தைகள், பாம்புகள், குளவிகளுக்கான வாழ்விடங்கலாக தேயிலைத் தோட்டங்கள் மாற்றப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான காடுகளுக்குள் சென்று தொழிலை மேற்கொள்ள விரும்பாத தொழிலாளர்கள், தேயிலைத் தொழிற்றுறையை கைவிட்டுச் செல்லும் நிலை அதிகரித்துள்ளது. தொழிலாளர்களுக்கான பாதுகாப்பின்மை, அதிக உழைப்பு, குறைந்த வருமானம், தோட்டச் சேவையாளர்களின் கெடுபிடி, ஆதிக்கம், தொழில் உரிமைகள் மறுக்கப்படுதல் உள்ளிட்ட பல காரணங்களால், தோட்டத் தொழிலாளர்கள் பெருந்தோட்டத்துறையைக் கைவிட்டுச் செல்லும் நிலை அதிகரித்துவிட்டது. அவ்வாறு பெருந்தோட்டத்திலிருந்து ஒவ்வொரு தொழிலாளியும் வெளியேறினால், தொழிற்சங்கம் நடத்துவதும் எதிர்காலத்தில் ஒரு கேள்விக்குறியாகவே அமைந்தும் விடும் அல்லவா?

இதில்தான், பெருந்தோட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டிய அவசியத்தைப் பற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டும். பெருந்தோட்டத்தில் எந்தவோர் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டுமாக இருந்தால், அதற்கு, பெருந்தோட்டக் கம்பனிகளின் அனுமதியைப் பெறவேண்டிய விதி ஆரம்பத்திலேயே எழுதப்பட்டுவிட்டது. இந்தச் சமூதாயத்தின் வளர்ச்சிக்கு, ஆரம்பம் முதல் இது ஒரு முட்டுக்கட்டையாக அமைந்து வருகின்றது என்றால் அதை பலரும் ஏற்றுக்கொள்வர்.

இன்று மலையகத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கு, தொழிற்பேட்டைகளை உருவாக்கி வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டுமாக இருந்தாலும்கூட, அதற்கான இடஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு பெருந்தோட்டக் கம்பனிகளிடம் அனுமதி பெறவேண்டிய நிலையே காணப்படுகிறது. இந்தத் தேர்தல் பிரசாரத்தில் கூட, பழைய தலைமைகளும் பல புதிய வரவுகளும் மலையகத்தில் தொழிற்பேட்டைகளை உருவாக்கி, தொழில்வாய்ப்புகளை வழங்குவதாகப் பிரசாரம் செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அனைத்துக் காணிகளும், பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமாக இருக்கும்போது, தொழிற்பேட்டைகளுக்கான நிலத்தை எங்கிருந்து பெறுவார்கள் என்று யாராவது கேள்வி எழுப்பியுள்ளீர்களா?

கொவிட் - 19 நெருக்கடியின் போதும், தரிசு நிலங்களை வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு பகிர்ந்தளிக்குமாறு அரசாங்கம் விடுத்த அறிவித்தலுக்கு அமைய, தரிசு நிலங்களில் விவசாயம் செய்ய முற்பட்டவர்களுக்கு எதிராக, நிர்வாகங்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தன. இதைவிட க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவர், புலமைப்பரிசிலைப் பெற வேண்டுமாக இருந்தால், தோட்ட நிர்வாகத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என்ற கேவலமான நிலை, பெருந்தோட்டத்தில் மாத்திரமே நடைபெற்று வருகின்றது. இவை அனைத்தையும் தொழிற்சங்கங்கள் பல வருடங்களாக வேடிக்கை மாத்திரம் பார்த்து வருகின்றது.

இவ்வாறு, மலையகத்தில் காணப்படும் தீர்க்கமுடியாத அல்லது தீர்க்க முடிந்தும் தீர்த்து வைக்கப்படாத பிரச்சினைகளை பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். சமீபத்தில் மலையகத்துக்கான கள விஜயமொன்றை மேற்கொண்டிருந்தபோது, இத்தனை காலங்களால் பல தொழிற்சங்கங்களின் கீழ் சந்தாப் பணம் செலுத்தி அதன் அங்கத்துவத்தை கொண்டிருந்தாலும், எந்தவொரு நன்மைகளையும் தாங்கள் பெற்றிருக்கவில்லை என்றாலும் குறிப்பிட்ட சில தொழிற்சங்கங்களின் வளர்ச்சிகாகவாவது நாம் அந்தத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கு வாக்களிப்போம் என்றே கூறப்பட்டது. அதாவது, "நன்மை கிடைக்காமல் அடிமை வாழ்க்கை வாழ்ந்தாலும் தொழிற்சங்கத்தை விட்டுக்கொடுக்க மாட்டோம்" என்ற ஒரு தீர்க்கமான முடிவிலேயே 80 சதவீதமான தோட்டத் தொழிலாளர்கள் உள்ளனர். இதிலிருந்து, தங்களது வாக்குகளை என்ன தேவைக்காகப் பயன்படுத்த வேண்டும் என்ற அடிப்படையான தெளிவைக் கூட இவர்கள் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

எது எவ்வாறாக இருந்தாலும், மலையக தேசியத்தை பாதுகாக்க வேண்டியது இன்றியமையாததாகும். அதற்கு மலையக தேசிய இன அரசியலை முன்நகர்த்த வேண்டியது கட்டாயமாகும். மலையக தேசிய இன அரசியலை முன் நகர்த்துவதற்கு முதலில் மலையகத் தமிழரின் இருப்பை பாதுகாக்கக் கூடிய விதத்திலான இலக்கு அவசியம். அடுத்து இலக்கை அடைவதற்கான கொள்கைகளும் கொள்கைகளை மையப்படுத்தியதான வேலைத்திட்டங்களும் வேண்டும். இந்த வேலைத்திட்டங்களை நீண்டகால குறுகியகால என்ற இரண்டு நிலைப்பாட்டில் இருக்கவேண்டும். வேலைத் திட்டங்களை முன்னெடுக்கக்கூடிய அமைப்பு வடிவமும், அதற்கான ஊழியர்களின் தேவையும் அடுத்து தீர்மானித்தல் வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேல் அர்ப்பணம் உள்ள தலைமையின் அவசியம் மிகவும் முக்கியமானதாகும். இறுதியாக மலையக தேசிய இன அரசியலை நேர்த்தியான முறையில் முன்னெடுப்பதன் ஊடாக மட்டுமே இன்று மலையக தேசியம் எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு முகம் கொடுத்து, அதன் தேசியத்தை முன் நிறுத்த முடியும். மலையகத்தின் எதிர்காலத் தலைமையாக யார் நியமிக்கப்பட்டாலும், "சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்காத நிலை" ஏற்படாமல் இருப்பதற்கு, மக்கள் சிந்தித்து வாக்களிக்கவேண்டும்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 4 ஓகஸ்ட் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.